விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 26.02.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 88 | பக்கங்கள் : 16

# தமிழர் அபிலாஷைகளை வழங்குவது இலங்கையின் நலன்களுக்கு உகந்தது!

## ஜெனிவாவில் இந்தியப் பிரதிநிதி வலியுறுத்தல்



ஜெனிவா,பெப்ரவரி 26

“இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் மத்திப்பீட்டு அறிக்கை மிகவும் கவலையளிக்கிறது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பது இலங்கையின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்கும் நேரடியாக பங்களிப்பு செய்யும்.”

-இவ்வாறு ஜெனிவாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே தெரிவித்தார். 02



## முகத்தை மறைக்கும் ஆடைகளுக்கு தடை!

### சட்டமூலம் விரைவில் என்கிறார் அலி சப்ரி

கொழும்பு, பெப். 26

புர்கா உள்ளிட்ட முகத்தை மறைக்கும் ஆடைகளை பொது இடங்களில் அணிவதற்கு தடை விதிக்கும் வகையில் சட்டமொன்று கொண்டு வரப்படும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். 02

## கொரோனா தொற்றால் மேலும் இருவர் மரணம்

கொழும்பு,பெப்.26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் இருவர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார். இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக் குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 459 ஆக அதிகரித்துள்ளது.

கடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 62 வயது பெண்ணொருவரும், வத்தளை பிரதேசத்தை சேர்ந்த 83 வயது பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்தனர். (அ-எ)

## கொரோனாவால் உயிரிழந்தோரை அடக்கம் செய்வதற்கும் அனுமதி!

### வெளியாகியது புதிய வர்த்தமானி

கொழும்பு, பெப். 26

கொவிட்-19 நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தகனம் அல்லது நல்லடக்கம் செய்ய அனுமதிக்கும் வர்த்தமானி அறிவிப்பு சுகாதார அமைச்சினால் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

முன்னைய கட்டளையில் தகனம் மட்டுமே என்ற சொற்பதம் நீக்கப்பட்டு தகனம் அல்லது அடக் 02

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை நிராகரிப்பதற்கு சு.க. தீர்மானம்

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழு சமர்ப்பித்த அறிக்கையை நிராகரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா இதனைத் தெரிவித்தார். (அ-எ)

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையில் உண்மை விடயங்கள் இல்லை!

### முன்னாள் பிரதமர் ரணில் கூறுகிறார்



கொழும்பு,பெப்.26

2019 ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பான எவ்வித உண்மையான விடயங்களையும் குறிப்பிடாது வெறுமனே ஒரு நாடு, ஒரு சட்டம் 02

## யாழில் மருத்துவர் உட்பட இருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், பெப்.26

வடக்கு மாகாணத்தில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் ஒருவர் தெல்லிப்பழை வைத்திய சாலை மருத்துவர் என்று வடமாகாண சுகா 02



## வைரஸை அழிக்கும் முகக்கவசம் அறிமுகம்

கொழும்பு, பெப். 26

இலங்கையில் தயாரிக்கப்பட்ட வைரஸ்களை அழிக்கும் புதிய முகக்கவசங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டன.

பேராதனை பல்கலைக்கழக நிபுணர்கள் மேற்கொண்ட நீண்ட ஆராய்ச் 02

## லண்டனில் தமிழ்ப் பெண் உண்ணாவிரத போராட்டம்

### 3 கோரிக்கைகளை முன்வைத்து இன்று ஆரம்பிக்கின்றார்

லண்டன், பெப். 26

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்ப் பெண் ஒருவர் லண்டனில் இன்று சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் பேரவையின் 46ஆவது மனித உரிமைகள் கூட் 02

## இலங்கைக்கு எதிரான பிரேரணையை தோற்கடிக்க நட்பு நாடுகளுடன் பேச்சு

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, பெப். 26

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கை அரசியல் கலந்த பக்கச் சார்பானதாக வுள்ளதாகவும், பேரவையில் இலங்கைக்கு எதிராக முன் வைக்கப்படும் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்காக நட்பு நாடுகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருவதாகவும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். 02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## தமிழர் அபிலாஷை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை தொடர்பான ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை மற்றும் அவரது உரையின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது.

இலங்கையின் மூன்று தசாப்தகால மோதல்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்த பின்னர் மனித உரிமைகள் தொடர்பான 7 தீர்மானங்களை இந்தப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் இந்தியா தீவிரமாக பங்கேற்று வருகிறது.

அதேபோன்று இலங்கையுடன் அதன் நெருங்கிய நட்பு நாடென்ற வகையிலும் அயலான் என்ற நோக்குடனும் இந்தியா தொடர்ந்தும் உறுதிப்பாட்டுடன் இலங்கை விடயத்தில் முன்னின்று செயற்படுகின்றது.

எவ்வாறாயினும் இலங்கை தொடர்பான இந்தியாவின் தொடர்ச்சியான நிலைப்பாடானது முக்கிய இரு தூண்களில் உள்ளது.

அதாவது இலங்கையின் ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கான ஆதரவு மற்றும் சமத்துவம், நீதி, அமைதி, கௌரவத்திற்கான இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளுக்கு உறுதியளித்தல் ஆகிய இரு பிராதன தூண்களை மையப்படுத்தியதாகவே எமது நிலைப்பாடுள்ளது.

இவை தவிர வேறு தேர்வுகள் இல்லை. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட தமிழ் சமூகத்தின் உரிமைகளை மதிப்பது, இலங்கை ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் நேரடியாக பங்களிப்பு செய்யும் என்பதை உறுதியாக நம்புகிறோம். எனவே, தமிழ் சமூகத்தின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றுவது இலங்கையின் சிறந்த நலன்களுக்கானது என்பதையே இந்தியா பரிந்துரைக்கிறது.

நல்லிணக்க செயல்முறை மற்றும் இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது உள்ளிட்ட இத்தகைய அபிலாஷைகளுக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கையை கேட்டுக்கொள்கிறோம்.

மோதலின் பின்னரான 12 ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து உயர்ஸ்தானிகரின் மதிப்பீடு கவலையளிக்கிறது.

இது குறித்து இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இந்த இரண்டையும் மதிப்பீடு செய்வதிலேயே இந்த பிரச்னைக்கு நீடித்த மற்றும் பயனுள்ள தீர்வைக்காண முடியும். இதற்கான உறுதிப்பாட்டின் மூலம் நாம் வழி நடத்தப்பட வேண்டும்-என்றார். (அ-எ)

## இலங்கைக்கு...

கண்டி - குண்டசாலையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை மற்றும் அதன் ஆணையாளரின் அறிக்கை முற்றுமுழுதாக பக்கச்சார்பானதாகும். அது குறித்து எந்தத் தர்க்கமும் இல்லை. பிரித்தானியாவின் என்டன் டேஸ், ஸ்மித், லோர்ட் நெஸ்லி போன்றவர்கள் உள்துறை அமைச்சுடன் 5 மாதங்களாக பேச்சு நடத்தி உண்மையான தகவல்ளை பெற்றுக் கொண்டுள்ளதை இதற்கு சிறந்த உதாரணங்களாகும் என சுட்டிக்காட்டுகின்றேன்.

திட்டமிடப்பட்ட வகையில் நாங்கள் நகர்ந்து வருகிறோம். சிறுவர் போராளி என்று தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் விடுதலைப் புலிகள் சிறுவர்களை அழைத்துச் சென்று அவர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளை அணிவித்து, புத்தகங்களுக்குப் பதிலாக துப்பாக்கிகளைக் கொடுத்து மிகவும் துரதிஷ்ட நிலைக்குத் தள்ளிவிட்டிருந்தார்கள்.

அதுகுறித்து மனித உரிமைகள் ஆணையாளரோ எவரும் ஒரு வார்த்தையேனும் தெரிவிக்கவிவில்லை. அவர்கள் தனிப்பட்ட அரசியலையே செய்கின்றார்கள். அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். இந்தப் போலி விம்பத்தை உடைப்பதற்காக நட்பு நாடுகளுடன் நாங்கள் பேச்சு நடத்திவருகின்றோம்-என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

என்ற பரிந்துரைகளை முன்வைத்து அரசியல் கட்சியொன்றின் கொள்கைப் பிரகடனமாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று முழுப் பாதுகாப்பு கட்டமைப்பையும் நெறிப்படுத்தி அடுத்த தாக்குதலொன்று இடம்பெறாதவாறு முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் உள்ளடக்கப்படவில்லை. இதனையொரு பெரும் குறைபாடாக தான் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் கட்சி உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதனால் அரசியலமைப்பில் காணப்படுகின்ற சிறப்புரிமைகளை இரத்து செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைப்பது போன்று இன ரீதியாக காணிகளை பிரிப்பதென்பது சாத்திப்படக் கூடிய விடயமா? இதே போன்று மறைக்கல்வி நிலையங்களை கண்காணிப்பதற்கான யோசனையின் நோக்கம் பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் பதவியை இரத்து செய்வதற்காகவா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தாக்குதல் ஒன்று இடம்பெறலாம் என்று 2019 ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற பாதுகாப்புசபை கூட்டம் குறித்து எவ்வித விடயங்களும் அறிக்கையில் காணப்படவில்லை.

அனைத்து இராணுவ அதிகாரிகள் , புலனாய்வு திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உயர் நிலை அதிகாரிகள் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் வெளிப்படுத்தாத விடயங்கள் பின்னர் பேசப்பட்டிருக்கலாம் என சிந்திக்க முடியாது.

ஆகவே உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கை புதிய விடயங்கள் எதனையும் குறிப்பிடவில்லை.

மாறாக ஒரு அரசியல் கட்சியின் கொள்கை பிரகடனமாகவே காணப்படுகிறது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி இடம்பெற்ற பாதுகாப்புசபை கூட்டத்தில் தாக்குதல் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தால் முஸ்லிம் அமைச்சர்களை அழைத்து எவ்விதமான சம்பவங்கள் இடம்பெற்றாலும் அதன் பொறுப்பை ஏற்க வேண்டும் என எமக்கு அறிவித்திருக்க முடியும்.

அதே போன்று அந்த சந்தர்ப்பத்தில் தாக்குதல் தொடர்பான தகவலை யார் அறிந்திருந்தார்கள் என்பதையும் அறிந்திருக்க முடியும். முதலாவது தாக்குதல் இடம்பெற்று குறுகிய நேரத்துக்குள் பிரதமர் என்ற வகையில் நான் பலவந்தமாக பாதுகாப்பு அமைச்சிற்கு சென்று அனைத்து பாதுகாப்பு அதிகாரிகளையும் அழைத்து அடுத்த தாக்குதல் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுத்தோம்-என்றார். (அ-எ)

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையை செயற்படுத்துவதற்கு கால அட்டவணை

## இலங்கையிடம் வலியுறுத்துகிறது அமெரிக்கா

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் சமர்ப்பித்த அறிக்கையை செயற்படுத்த இலங்கை தனது மூலோபாயத்தையும், காலஅட்டவணையையும் வெளிப்படுத்தவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கை மீதான ஊடாடும் உரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய, ஐ.நாவுக்கான அமெரிக்க நிரந்தர வதிவிட பிரதிநிதி டானியல் க்ரோனென்பெல்ட் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுபான்மை சமூகங்கள் ஓரங்கட்டப்படுதல் மற்றும் சுயாதீன ஊடகங்கள், சிவில் சமூகத்திற்கான இடைவெளிகளை சுருக்குவது போன்ற விடயங்களால் நாங்கள் கவலையடைகிறோம்.

மோதல் கால துஷ்பிரயோகங்களுக்கு நம்பத்தகுந்ததாக குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளின் உயர் மட்ட நியமனங்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூறல் பற்றாக்குறை குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் எழுப்பப்பட்ட கவலைகளை தீர்க்க இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு செயல்முறை மூலமான முயற்சிகள் அர்த்தமுள்ளதாகவும் நம்பகமானதாகவும் இருக்கவேண்டும்.

இலங்கை அரசால் நிறுவப்பட்ட விசாரணை ஆணைக்குழு பொறுப்புக்கூறலைத் தொடர ஆணையைக் கொண்டிருக்கவில்லை என்பதை நாங்கள் கவனிக்கிறோம். காணாமல் போனவர்கள் மற்றும் இழப்பீடு வழங்கும் அலுவலகம் அரசியல் தலையீடு இல்லாமல் செயல்பட வேண்டும்-என்றார்.

## லண்டனில்...

டத் தொடரில், பிரிட்டனால் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைத்தல், சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் இலங்கைக்கான ஐ.நா. நிரந்தர சிறப்புப் பிரதிநிதியை நியமித்தல் போன்றவற்றை உள்ளடக்கவேண்டும் என பிரிட்டன் அரசிடம் வேண்டுகோள் விடுத்து சாகும்வரை உணவுத்தவிர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை லண்டனில் ஆரம்பமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் அம்பிக்கை செல்வகுமார் என்ற பெண்மணியே இந்தப் போராட்டத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளார்.

சர்வதேச இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும் வழக்காடு மையத்தின் பணிப்பாளராக அம்பிகை பணியாற்றுகின்றார். அத்துடன், தொடர்ச்சியாக தமிழர்களின் பிரச்னையை சர்வதேசமயப்படுத்தும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறார்.

தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள மூன்று கோரிக்கைகளில் ஒன்றாவது நிறைவேற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் அவர், அதற்கான சாத்தியங்கள் உள்ளன என்ற நம்பிக்கையுடனேயே இந்தப் போராட்டத்தை தான் ஆரம்பிப்பதாகவும் தெரிவித்தார்.

## முகத்தை மறைக்கும்...

நீதி அமைச்சில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

முஸ்லிம் சட்டத்தில் கொண்டுவரப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். அந்த வகையில் பொது இடங்களில் முகத்தை மறைக்கும் வகையிலான ஆடைகளை அணியக் கூடாது என்பது தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயமாகும். இது ஒரு சமூகத்தை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அல்ல. மாறாக நாட்டின் பாதுகாப்பை மையமாக கொண்ட விடயமாகும்.

ஏனெனில் இஸ்லாமியப் பெண்கள் புர்கா எனப்படும் முகத்தை மறைக்கும் ஆடையை அணிவர். ஆகவே, இது தொடர்பிலும் அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த விடயத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது பாரிய அளவிலான செயற்திட்டமொன்றாகும். ஆகவே நாம் இந்த விடயங்களை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்கின்றோம். அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு முன்னோக்கி பயணிப்பதே எம்முடைய நோக்கமாகும். ஆகவே, நாம் அதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டுவருகின்றோம்-என்றார்.

## கொரோனாவால்...

கம் என்று மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் பணிப்புரைக்கு அமைய அத்தகைய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் முறையான அதிகாரியினால் அங்கீ கரிக்கப்படும் சுடலை அல்லது இடத்தில் அடக்கம் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் மருத்துவர்...

தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட 451 பேரின் பி.சி.ஆர். பரிசோதனையில் இந்த இருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதேவேளை, கொரோனா உறுதி செய்யப்பட்ட மருத்துவர் சிகிச்சை வழங் கிய நோயாளி ஒருவர் கொழும்பு தனி யார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால் மருத்துவரிடம் மாதிரிகள் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டபோது அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் ஒருவர் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் மிருசுவில் தொற்றாளர் பங்கேற்ற தேவாலயக் கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்தார் என்று தெரியவந்துள்ளது என மருத்துவர் கேதீஸ்வரன் குறிப்பிட்டார். (அ-எ)

## வைரஸை...

சியைத் தொடர்ந்து, கொவிட்-19 உள்ளிட்ட வைரஸ்களை அழிக்கும் புதிய முகக்கவசம் தயாரிக்கப்பட்டது. அது நேற்று பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறை மூத்த பேராசிரியர் காமினி ராஜபக்ஷ இது பற்றி விளக்கமளிக்கையில்,

முகக்கவசம் மூன்று அடுக்குகளால் ஆனது. உலகில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட முகக்கவசம் இதுவாகும்.

முதல் அடுக்கு உமிழ்நீர் போன்ற திரவங்களை அகற்றுவதற்காக தயாரிக்கப்படுகிறது, இரண்டாவது அடுக்கில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு சிறப்பு வேதிப்பொருள் வைரஸை அழிக்கிறது. மூன்றாவது அடுக்கு உமிழ்நீர் துளிகளை ஆவியாக்குவதற்கு செயல்படுகிறது.

முகக்கவசத்தை தொடர்ச்சியாக இருபத்தைந்து தடவைகள் கழுவி மீண்டும் பயன்படுத்தலாம்.

பேராதனை பல்கலைகழகத்தின் அறிவியல் பீடம் மற்றும் மருத்துவ பீடம் ஆகியவற்றின் ஆய்வின்படி, முகக்வசத்தில் ஒட்டிக்கொள்ளும் 99 வீத வைரஸ்கள் அழிக்கப்படுகின்றன என்பது உறுதியாகியுள்ளது-என்றார்.

ஈழநாடு
Eelanadu
26.02.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, மாசி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இலங்கை மீதான பிரேரணை இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், இலங்கை தொடர்பான விடயங்கள் விவாதிக்கப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் வரவுள்ள புதிய பிரேரணை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவாக இருக்குமென்பது தொடர்பில் பலவாறான ஊகங்கள் காணப்படுகின்றன. பேரவையில் தங்களுக்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை ஏற்கனவே இந்திய பிரதமரிடம் கோரியிருக்கின்றது. எனினும், இதுவரையில், குறித்த கடிதம் தொடர்பில் புதுடில்லி எதுவிதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை. இவ்வாறானதொரு நிலையில், இந்தியா தங்களுக்கு எதிராக செயல்படாது என்றவாறான அபிப்பிராயங்களை அரசாங்க தரப்பினர் வெளியிட்டு வருகின்றனர்.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலத்தில் கூட்டு அரசாங்கமாக இருந்த காங்கிரஸ் அரசாங்கம், தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவேண்டிய நிர்பந்தத்தில் இருந்தது. இதனால் இலங்கை தொடர்பான அமெரிக்க பிரேரணைகளை ஆதரிக்க வேண்டிய நிர்பந்தம் உருவாகியிருந்தது. ஆனாலும், 2014இல் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கான வாக்கெடுப்பின்போது, இந்தியா வெளிநடப்பு செய்திருந்து. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வரக்கூடியதொரு சூழலிலேயே காங்கிரஸ் அரசாங்கம் அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்திருந்தது. அதன் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பி.ஜே.பி. அரசாங்கம் 2015இல் இலங்கை அரசாங்கத்தினால் இணையனுசரணை வழங்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட, பொறுப்புக்கூறல் தொடர்பான பிரேரணைக்கு ஆதரவு வழங்கியிருந்தது. இலங்கை அரசாங்கம் இணையனுசரணை வழங்கிய பிரேணையை ஆதரிப்பதில் இந்தியாவிற்கு எந்தவொரு சிக்கலும் இருந்திருக்கவில்லை. 2017இல், மேலும் இரண்டு வருடங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவது தொடர்பான 40-1 பிரேரணையை ஆதரிப்பதிலும் இந்தியாவிற்கு சிக்கல்கள் இருந்திருக்கவில்லை. ஆனால், தற்போதைய நிலைமை முற்றிலும் வித்தியாசமானது.

ராஜபக்ஷக்கள் மீளவும் ஆட்சியை கைப்பற்றியதற்கு பின்னர், மீளவும் இலங்கை தொடர்பில் புதியதொரு பிரேரணையை கொண்டுவருவதற்கான முயற்சிகளே தற்போது இடம்பெறுகின்றன. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைப்பதை முற்றிலுமாக நிராகரித்திருக்கின்றது. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையுடன் மோதவுள்ள நிலையில், முன்வைக்கப்படும் பிரேரணை தொடர்பில் இந்தியா எவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுக்கும் என்பது தொடர்பிலேயே தற்போது கேள்விகள் எழுந்திருக்கின்றன. குறித்த பிரேரணை தொடர்பில், இதுவரை இந்தியாவின் பக்கத்திலிருந்து எவ்விதமான கருத்துக்களும் வெளியாகியிருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்தியாவின் உதவியை நாடியிருக்கின்றது. சீனாவும் ரஷ்யாவும் ஏற்கனவே இலங்கைக்கான தங்களின் ஆதரவை பகிரங்கமாக அறிவித்திருக்கின்ற நிலையில், இந்தியா இதனை எவ்வாறு நோக்கும்? எவ்வாறானதொரு முடிவை எடுக்கலாம் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில், தற்போதுள்ள பி.ஜே.பி. அரசாங்கம் எந்தவொரு கட்சியின் பிரத்தியேக ஆதரவையும் பெறவேண்டிய தேவையற்ற அரசாங்கம். எனவே, அதன்மீது உள்ளக மட்டத்தில் தமிழ் நாட்டால் பெரியளவில் அழுத்தங்கள் எதனையும் பிரயோகிக்க முடியாது.

ஆனால், அண்மைக்காலமாக இலங்கை கடைப்பிடித்துவரும் சில அணுகுமுறைகள் புதுடில்லிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக, ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட கிழக்கு கொள்கலன் முனைய ஒப்பந்தத்திலிருந்து இலங்கை வெளியேறியதை புதுடில்லி ஆட்சேபித்திருந்தது. அதேவேளை, அண்மையில் இராமேஸ்வரத்திற்கு மிகவும் அண்மையில் அமைந்திருக்கும் இரண்டு தீவுகளில் சீனர்கள் கால்பதிப்பதற்கு ஏற்றவாறான திட்டமொன்றிற்கான அனுமதியை வழங்கியமை போன்ற விடயங்களால் புதுடில்லி அதிருப்தியடைந்திருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், இலங்கைக்கு ஒரு செய்தியை வழங்குவதற்கு இந்த பிரேரணை விவகாரத்தை பயன்படுத்திக்கொள்ள இந்தியா முயற்சிக்குமா?

# ஜெனிவா விவகாரம்: இலவு காத்த கிளிகளாக பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்கள்!

- அலசுவது இராஜதந்திரி -

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட், இலங்கை அரசு ஜெனிவா பிரேரணையிலிருந்து விலகிய தன் மூலம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையு டன் தனது தொடர்புகளை துண்டித்துக் கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். ‘இலங்கை, கதவுகளை மூடிவிட்டுள்ளது’ என்று தனது வார்த்தையில் மிச்செல் பச்லேட் தெரிவித்துள்ளார்.*

*இலங்கை அரசுக்கும் ஐ. நா மனித உரிமைப் பேரவைக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், ‘இலவு காத்த கிளி’களாக பாதிக்கப்பட்ட மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இலங்கை அரசின் இத்தகைய நிலைப்பாட்டுக்கு பிரேரணை கொண்டு வரப்பட்ட காலத்தில் வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களை ஜெனிவாவில் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் அரசியல் வாதிகளே முக்கிய காரணமாக இருக்கின்றனர் என்பதை குறிப்பிட வேண்டியுள்ளது.*

*இலங்கையில், கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு ஆணைக் குழுக்கள் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் எவ்வித பயன்களையும் பெற்றுத்தராத நிலையில், சர்வதேச அணுகுமுறைகளே தமக்கு விமோசனத்தை பெற்றுத்தரும் என்று வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்திருந்தனர்.*

*ஆனால், ஐ. நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் ஐ. நா.மனித உரிமைப் பேரவை தனது கதவுகளை மூடிக் கொண்டு விட்டது எனக்குறிப்பிட்டிருப்ப தன்மூலம், சர்வதேச சமூகமும் இலங்கை அரசின்மீது நம்பிக்கை இழந்த நிலையில் செய்வதறியாத நிலைக்குத்தள்ளப்பட்டு விட்டதோ என்றே எண்ணத்தோன்றுகிறது.*

**கடும் போக்கு**

*இலங்கையின் இன்றைய அரசு சர்வதேச சமூகம் குறித்து ஒரு கடும்போக்கான நிலையையே கொண்டிருக்கின்றது. இத்தகைய தன்மை யுத்தம் மூடிவுக்குவந்த காலம் முதல் இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதிலும், வடக்கு - கிழக்கு மக்கள் 2015ஆம் ஆண்டில் தமது பேராதரவை வழங்கி ஏற்படுத்திய நல்லாட்சி அரசாங்கம் மூலமாக தமக்கு ஏற்பட்ட ‘யுத்த வடுக்களை’ நீக்கிக்கொள்ளமுடியும் என்றே எதிர்பார்த்தனர்.*

*ஆனால், நல்லாட்சி அரசாங்கமும் ஜெனிவா பிரேரணையை நிறைவேற்றுவது தொடர்பில் தாமதங்களை ஏற்படுத்தியிருந்த தோடு, இத் தாமதங்களுக்கு அனுசரணை வழங்குவதில் வடக்கு - கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் அரசியல் தரப்பு முக்கிய பங்காற்றியிருந்தது.*

*2016ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையிலிருந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால் இன்று வடக்கு - கிழக்கு மக்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த தீர்வுகள் கிடைப்பதில் வெற்றிகண்டிருக்க முடியும்.*

*ஆனால், ஒரு தடவையல்ல. பல்வேறு தடவைகள் தாமதங்களை ஏற்படுத்துவதில் தமிழ்தரப்பு தனது ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. பின்னாட்களில் ஆட்சிக்கு வருவோர் ஜெனிவா விவகாரத்தை தட்டிக்கழிக்க முடியும் என்பதை தமிழ் தரப்பு ஒரு தூரநோக்கோடு அறிந்து கொள்ளத்தவறியிருந்தது ‘காற்றுள்ளபோதே தூற்றத் தவறிய’தாகவே தமிழ் தரப்பு முன்னர் ஜெனிவா விவகாரத்தை கையாளத் தவறியிருந்தது.*

*இந்நிலையில், யாவரும் எதிர்பார்தது போலவே இன்றைய அரசு ஜெனிவாவுடனான தனது தொடர்பை துண்டித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

**முக்கிய கேள்வி**

*இதன்காரணமாக சர்வதேச சமூகம் எதிர்காலத்தில் எத்தகைய போக்கினைக் கையாண்டு, இலங்கையை வழிக்குக்கொண்டு வர முற்படும் என்பது முக்கிய கேள்வியாகவே இருக்கின்றது.*

*சர்வதேச நிறுவனங்களைப் பொறுத்தவரை ஒரு முழுமையான இறையாண்மையுள்ள நாட்டின் உள் விவகாரங்களில் எல்லை மீறாத நிலையைக் கடைப்பிடிப்பவையாகவே இருக்கின்றன.*

*வழிகாட்டல்களை வழங்குவதோடு, ஒரு நாட்டின் அனுமதியோடு மட்டுமே அதன் உள் விவகாரங்களில் தலையிடும் போக்கை ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகள் கொண்டுள்ளதை அவதானிக்க முடியும்.*

*பதினொரு வருடங்களுக்கு முன்னர் வன்னியில் இறுதிக்கட்ட யுத்தம் ஆரம்பிக்கப்படுமுன்னர் அன்றைய ராஜபக்ஷ அரசாங்கம் வடக்கு - கிழக்கில் பணியாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டர் நிறுவனங்களை வெளியேற்றியதே முதல் நடவடிக்கையாக அமைந்திருந்தது. எனவே, சர்வதேச சமூகத்தின் நெறிப்படுத்தல்களுக்கும், பணிப்புரைகளுக்கும் பணிந்துவிடப் போவதில்லை என்ற செய்தியை இன்றைய ஆட்சியாளர்கள் வழங்கியுள்ள நிலையில், சர்வதச சமூகம் மட்டுமல்ல. வடக்கு-கிழக்கின் தமிழ் தரப்பும் எதிர்காலத்தில் மனித உரிமைகள் மீறல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசை எவ்வாறு வழிக்குக்கொண்டுவரப்போகின்றன என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.* ●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உங்களின் நேர்மை குணம் நல்ல பெயரை வாங்கித் தரும். குடும்பத்தினருடன் நல்ல புரிதல் ஏற்பட்டு நிம்மதி கிடைக்கும். புதியவரின் அறிமுகம் எதிர்கால நன்மைக்கு உதவும்.

**இடபம்**
பணிச்சுமை குறைவதால் மனஅழுத்தம் தீரும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். திடீர் உதவிகள் கிடைப்பதால் உற்சாகம் அடைவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் திருமணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். கடந்த காலச் செய்கை ஒன்றால் இப்போது நன்மை உண்டு. உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும்.

**கடகம்**
வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பலம் பெருகும். அழகுணர்ச்சி அதிகரிக்கும். பிறர் செய்த தவறை மன்னிப்பீர்கள். அரசியல் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்**
மேலதிகாரி ஒருவரால் நன்மையும் லாபமும் பெறுவீர்கள். மற்றவர்கள் பாராட்டும்படியான செயல்களைச் செய்வீர்கள். வீட்டில் சில மாற்றங்கள் செய்து அழகைக் கூட்டுவீர்கள்.

**கன்னி**
குழம்பிய மனம் தெளிவு பெறும்படியான நிகழ்வு நடக்கும். சக ஊழியர்களுடன் இருந்த கசப்பு நீங்கி ஒற்றுமை பிறக்கும். வாழ்க்கையை திரும்பிப் பார்த்து உங்களை மாற்றி கொள்வீர்கள்.

**துலாம்**
புதிய யுக்திகளைக் கற்பீர்கள். மனம் அமைதி அடையும். புதிதாக நல்ல குணம் ஒன்றைக் கைக் கொள்ள ஆரம்பிப்பீர்கள். சக ஊழியர்களுக்கு உதவி செய்து நெகிழ செய்வீர்கள்.

**விருட்சிகம்**
புது நட்பு மலரும். பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவர். பிறரை நியாயமாக விமர்சனம் செய்வீர்கள். கோபம் தீரும். நேர்மையான செயலால் உங்களுக்கு நற்பலன் கிடைக்கும்.

**தனுசு**
அதிகமாக யோசித்துக் குழம்புவீர்கள். கவலை தீரும். யாரையும் தட்டிக் கேட்பதாக நினைத்து புண்படச் செய்ய வேண்டாம். துணிச்சலுடன் செயல்பட்டுப் பழிச் சொல்லுக்கு ஆளாகக்கூடும்.

**மகரம்**
உங்களின் அவசரத்தால் நல்ல மனிதரை இழக்க வேண்டாம். இளைஞர்களுக்கு நல்வழி காட்டும் ஒருவர் கிடைப்பார். மற்றவரைக் காப்பாற்றுவீர்கள். காதல் அனுபவம் கிடைக்கும்.

**கும்பம்**
பலகாலம் கழித்து நிம்மதி மீளும். நல்ல செய்தி வரும். சிலருடைய உண்மை முகம் தெரிந்து வியப்படைவீர்கள். அநாவசிய செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். பகை தீரும்.

**மீனம்**
வாழ்வில் உயரும் வழிகளைச் செயல்படுத்த ஆரம்பிப்பீர்கள். புதிய பயிற்சி எடுப்பீர்கள். யாரையும் குறைத்து மதிப்பிடாதீர்கள். கலகலப்பான நாளாக அமையும். தாயின் ஆசை நிறைவேறும்.

# போர் முடிந்து 12 ஆண்டுகளாகியும் தொடர்கின்றன அடக்குமுறைகள்!

## இலங்கை மீது ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கடும் குற்றச்சாட்டு




ஜெனிவா, பெப். 26

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 12 ஆண்டுகள் கடந்த பிறகும் அங்கு பல இடங்களில் அப்பட்டமாக மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் 46ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காணொளி வாயிலாக தனது அறிக்கை முடிவு குறித்தும் தீர்மான குறிப்பு பற்றியும் விளக்கினார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்.

"எனது அறிக்கை குறிப்பிடுவது போல, உள்நாட்டு யுத்தம் முடிந்த சுமார் 12 ஆண்டுகள் கடந்த பிறகும் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப்படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் நிலவிய அதே அடக்குமுறை, துன்புறுத்தல் போன்றவை தொடர்ந்திருக்கிறது," என்று மிச்செல் பச்லெட் கூறினார்.

2015ஆம் ஆண்டில், மனித உரிமை மீறல் நடக்காதவாறு பார்த்துக் கொள்வதாக உறுதிமொழி அளித்த பிறகும், தற்போதைய அரசு, அதன் முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே, உண்மையை கண்டறியவும் குற்றங்களுக்கு பொறுப்புடைமையாக்கும் நடவடிக்கையிலும் தோல்வி அடைந்தது.

**உயிர் பிழைத்தவர்களின் வாழ்க்கை நிர்மூலம்**

போரில் உயிர் பிழைத்த ஆயிரக்கணக் கானோரின் வாழ்வு நிர்மூலமாகியிருக்கிறது. அதுமட்டுமன்றி அமைப்பு முறை, கட்டமைப்பு, கொள்கைகள், பணியாளர்கள் போன்றவற்றில் முந்தைய காலம் போலவே விதிமீறல்கள் தொடருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முக்கியமான பணி, குறைகளுக்கு தீர்வு கண்டு முந்தைய விதிமீறல்கள் நடக்காதவாறு கவனிப்பதுதான்.

கடந்த ஆண்டு, முக்கிய பகுதிகளில் மிகக் கடுமையான வகையில் சங்கடத்தை தரக்கூடிய போக்கு தீவிரமாக இருப்பதை எமது அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

முந்தைய ஆண்டுகளில் வளர்ந்து வந்த சிவில் சமூகமும் தன்னிச்சையான ஊடகமும் தற்போது வேகமாக சுருங்கி வருகின்றன. நீதித்துறை சுதந்திரம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம், தேசிய பொலிஸ் ஆணையம் ஆகியவை, அண்மையில் கொண்டு வரப்பட்ட 20ஆவது அரசமைப்பு திருத்தம் மூலம் பலவீனமாக்கப்பட்டுள்ளன.

முக்கியமான சிவில் நிர்வாகப் பணிகளில் வளர்ந்து வரும் இராணுவத் தலையீடு, ஜனநாயக ஆளுகை மீதான ஆக்கிரமிப்பாக பார்க்கப்படுகிறது. பிரத்தியேக சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் தொடர்ச்சியான தோல்வி அல்லது விதிமீறல்களுக்கு காரணமானவர்களை அடையாளம் காணாமல் இருப்பது, கொடூரமான குற்றங்கள் மற்றும் விதி மீறலில் குற்றம்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளை பொறுப்புடைமைக்கு ஆளாக்காமல் விட்டுள்ளது அரசின் அலட்சியத்தை காட்டுகிறது.

தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர், அரசின் உயர் பொறுப்புகள் உள்ளிட்ட பணிகளில் சேராத வகையில், பிளவுபடுத்தக்கூடிய மற்றும் தவறான சொல்லாடல்களால் தவிர்க்கப்படுகிறார்கள்.

**சிறுபான்மை சமூகங்கள் கவலை**

கொவிட்-19 சடலங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தகனம் செய்யப்படுவது முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவ சிறுபான்மை சமூகங்களுக்கு வலியையும் சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமானால், நீண்ட கால அடிப்படையிலான அமைப்பு சார்ந்த பிரச்னைகள் இலங்கையில் தொடருகின்றன.

கடந்த கால வன்முறைகள், இப்போதும் தொடரலாம் என்ற அபாய செய்தியின் அறிகுறி தெளிவாக தென்படுகிறது. அடுத்து வந்த அரசுகள், உண்மையையும் பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதில் தோல்வி அடைந்துவிட்டன. உண்மையில், மனித உரிமைகள் வழக்குகளில் அரசாங்கம் நீதி நடைமுறைகளுக்கு தடங்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

முந்தைய ஆணையங்களின் கண்டுபிடிப்புகளை மறுஆய்வு செய்வதற்காக கடந்த ஜனவரியில் அமைக்கப்பட்ட ஆணையம், அர்த்தமற்ற முடிவின்றி அதே பாணியை தொடர்ந்திருக்கிறது. ஆணையம் முன்பு வழங்கிய பரிந்துரையை அமுல்படுத்தாதவண்ணம், உண்மையான முன்னேற்றத்தை தேசிய நடைமுறைகள் மூலம் செயல்படுத்தும் வாய்ப்பை அரசு மூடி விட்டது.

இதுபோன்ற காரணங்களால், புதிய வகையிலான பொறுப்புணர்வை உள்ளடக்கிய தீர்வை ஆராயவும் எதிர்காலத்தில் உறுப்பு நாடுகளில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களை உறுதிப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வழிமுறைகளை கையாளவும் வலியுறுத்துகிறேன்- என்று மிச்செல் பச்லெட் தெரிவித்தார்.

# சிக்குவாரா மைத்திரி?

## கட்சி சகாக்களுடன் அவசர ஆலோசனை

கொழும்பு, பெப். 26

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கொழும்பில் முகாமிட்டு கட்சி சகாக்களுடன் முக்கிய சந்திப்புகளை நடத்திவருகின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை வெளிவந்துள்ளது.

குறித்த அறிக்கையில் ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலை தடுப்பதற்கு தவறியமை, கடமையை நிறைவேற்றத் தவறியமை மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றவியல் வழக்குகளை தாக்கல் செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக் கூறவேண்டிய அரசியல்வாதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டபோது பாதுகாப்பு அமைச்சராகவும் முப்படைகளின் தளபதியாகவும் இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அடங்குகின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சு.கவின் அவசர



மத்திய செயற்குழுக் கூட்டத்தை மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் கூட்டினார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அறிக்கை மற்றும் அடுத்த கட்ட நகர்வுகள் உட்பட சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

## வயோதிபப் பெண்ணை தாக்கி கொள்ளை; 2 சந்தேக நபர்கள் வேலணையில் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 26

ஊர்காவற்றுறை சரவணையில் பட்டப்பகலில் வீடு புகுந்து வயோதிப் பெண்ணைத் தாக்கி தங்க நகைகளை கொள்ளையிட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, மானிப்பாயைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிட்ட நகைகள் நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன், அலை பேசி ஒன்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் கூறினர்.

(அ)

# வடக்கின் சுற்றுலாத்துறை விரைவில் முன்னேற்றப்படும்

## ஆளுநர் சாள்ஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 26

**எதிர்வரும் காலத்தில், வடக்கு மாகாணத்தில், சுற்றுலாத்துறை சார்ந்த வேலைத்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு வடக்கு மாகாண சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வடமாகாண சுற்றுலாப் பணியகமும் சர்வதேச சுற்றுலா சம்மேளனமும் இணைந்து, வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சுற்றுலாத் துறை சார் வழிகாட்டல் ஆவணம், சுற்றுலா மையங்களின் காணொளிகள் மற்றும் வழிகாட்டிகள் என்பன யாழ்ப்பாணத்தில் நேற்று முன தினம் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் இப்பெப்ரவரி மாதத்திலிருந்து இவ்வருடம் பெப்ரவரி 25ஆம் திகதி வரை சுற்றுலாத்துறை சார்ந்த அனைத்து முதலீட்டு செயற்பாடுகள், பொருளாதாரச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுற்றுலாத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் பலர் கொரோனா தொற்று நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், வடக்கின் சுற்றுலாத்துறையை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக, வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டமானது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

அத்தோடு, வடக்கு மாகாணத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள 150 சுற்றுலா மையங்கள் தொடர்பான ஆவணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

எதிர்வரும் காலத்தில் வடக்கு மாகாணத்தில், சுற்றுலாத்துறை சார்ந்த வேலைத்திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு, வடக்கு மாகாண சுற்றுலாத் துறை ஏனைய பிரதேசங்களை போல முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(அ)

## இலங்கை - இந்திய சுற்றுலா விமான சேவைகள் விரைவில்

கொழும்பு, பெப்.26

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சுற்றுலா விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பது இந்திய அரசாங்கத்தின் ஆலோசனையாகும் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சுற்றுலா விமான சேவைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோருக்கு இடையில் சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக தடைப்பட்டிருந்த பலாலி விமான நிலைய அபிவிருத்தி மற்றும் அதன் செயற்பாடுளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலும் இந்த கலந்துரையாடலின்போது அவதானம் செலுத்தப்பட்டது.





# இலங்கை மீதான பிரேரணைக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, பெப். 26

பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளின் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானிய துதர கத்துக்கு முன்பாக மக்கள் பொறுப்பு மையத்தின் உறுப்பினர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(அ)

## சுதேசாபிமான சிந்தனையுடனான சுபீட்சமான நாட்டை உருவாக்குவோம்

### பிரதமர் மஹிந்த அழைப்பு



கொழும்பு, பெப். 26

முன்னாள் சபாநாயகர் வி.ஜ.மு. லொகுபண்டார விரும்பிய சுதேசாபிமான சிந்தனையுடனான ஒரு சுபீட்சமான நாட்டை உருவாக்குவதே நாம் அவரது சார்பாக இப்போது செய்ய கூடிய மிகப் பெரிய கடமையாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் சபாநாயகர் வி.ஜ.மு. லொகுபண்டாரவின் மறைவு குறித்து பாராளுமன்றத்தில் பிரதமர் ஆற்றிய இரங்கல் உரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் “1941ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி பிறந்த வி.ஜ.மு. லொகு பண்டார யஹல பெத்த வித்தியாலயம் மற்றும் பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை பயின்றார். அவர் பேராதனை பல் கலைக்கழகம் மற்றும் லண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்றவராவார்.

சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்ற வி.ஜ.மு. லொகு பண்டார ஒரு வழக்கறிஞராகவே அரசியலில் நுழைந்தார். அவர் அரசியலில் நுழைவதற்கு முன்பே, சிங்கள மொழி, கலாசாரம் மற்றும் மதம் ஆகியவற்றின் மீது ஆழமான பிணைப்பை கொண்டிருந்தார். அவர் இளம் வயதி லிருந்தே பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதினார் என்பது எங்களுக் குத் தெரியும். விவாதங்களில் ஈடுபட்டார். இவ்வாதங்கள் அப்போது நாட்டின் தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

அதுமாத்திரமன்றி வி.ஜ.மு. லொகு பண்டார அவர்களினால் தேசத்திற்கு பங்களித்த பல சிறந்த படைப்புகளும் உள்ளன. சீகிரியா கீ சிறி போன்ற விமர்சன படைப்புகள் மொழி மற்றும் கலாசார ஆர்வலர்களிடையே அதிகம் பேசப்பட்டன.

1977ஆம் ஆண்டு ஹப்புதளை ஆசனத்தை வெற்றி கொண்டு ஐ.தே.க ஊடாக அரசியலுக்குள் நுழைந்த வி.ஜ.மு.லொகுபண்டார அவர்கள், அரசியல்வாதியாக வும் தனது தேசம் மீதான ஆர்வத்தை கைவிடாத சிறந்த மனிதராவார். அமைச்சு பதவி கிடைக்கும்போது சிலர் மாறிவிடுவார்கள். எனினும், வி.ஜ.மு. லொக்கு பண்டார அவ்வாறு மாறவில்லை.

விவாதங்களின் போது கூட அவர் மொழி மற்றும் இலக்கியம் குறித்த தனது அறிவை அரசியல் அரங்கிற்கு கொண்டு வந்தார். எதிர்ப்பாளர்களின் மனம் நோகாதபடி கருத்துக்களை எதிர்ப்பா ளர்கள் மத்தியில் பரப்பும் ஒரு தனித்துவமான திறனைக் கொண்டிருந்தார். இதன் காரணமாக அவர் ஒரு திறமையான பேச்சாளராக மக்கள் மத்தியில் பாராட்டப்பட்டார். என்றார்.

(அ)

# நாடு முழுவதும் கொரோனா தடுப்பூசி பெறும் வரை எனக்கு அது வேண்டாம்

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



கொழும்பு, பெப். 26

நாடு முழுவதும் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொள்ளும் வரை எனக்குத் தடுப்பூசி வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளும் கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்ட பின்னர் நான் தடுப்பூசி பெற்றுக்கொள்வதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கான சரியான ஒழுங்குமுறை விதிகளைப் பின்பற்றவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்காக இராணுவ வைத்தியசாலைக்கு வருமாறு தொலைபேசியில் அழைப்பு விடுத்தனர்.

ஆனால் நான் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில்லை என்று தீர்மானித்துள்ளேன்.

தடுப்பூசியை செலுத்தி விட்டு மக்கள் மத்தியில் செல்ல முடியாது.

ஏனென்றால் பொதுக்கூட்டத்தில் நாடு மக்களுக்காக தான் என பேசிவிட்டு இப்போது எவ்வாறு செயற்படுவது.

நான் அறிந்த வரையில் 5 இலட்சம் கொரோனா தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றன. மேலும் தடுப்பூசிகள் பெறப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இப்போது கிடைத்துள்ள 5இலட்ச தடுப்பூசியை எவ்வாறு செலுத்துவார்கள்? இதற்கான ஒழுங்கு முறை மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் நாட்டின் அனைத்து மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்திய பின்னர் அல்லது அனைவருக்கும் செலுத்த கூடிய வகையில் தடுப்பூசி இறக்குமதி செய்த பின்னர் நான் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளேன்- என்றார்.




## பருத்தித்துறை வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் சுகாதார சேவையில் முறையற்ற நியமனங்களை நிறுத்தக்கோரியும், சிற்றூழியர்களுக்கு மட்டுமேயான இலத்திரனியல் கைவிரல் பதிவை அனைவருக்கும் மாற்றுமாறு கோரியும், தமக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வு, கொடுப்பனவு உயர்வு, வழங்கக் கோரியும் நேற்று முற்பகல் 10:30 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு பூராகவும் சுகாதார திணைக்களத்தின் சிற்றூழியர்கள் என வகைப்படுத்தப்பட்ட மேற்பார்வையாளர்கள், பரிசாரகர்கள், சுகாதார சிரேஷ்ட கனிஸ்ர ஊழியர்கள், தொலைபேசி பரிவர்த்தனையாளர்கள், சாரதிகள் உட்பட்ட சிற்றூழியர்கள் வகைப்படுத்தப்பட்டவர்கள் நேற்றிலிருந்து சுகயீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாகவே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-02)

## வினை விதைத்தோர் வினை அறுக்கும் 'கவுண்ட் டவுண்' படலம் ஆரம்பமாகிறது

### மனோ கணேசன் சொல்கிறார்



கொழும்பு, பெப். 26

"வினை விதைத்தோர், வினை அறுக்கும்" 'கவுண்ட் டவுண் படலம் ஆரம்பமாகிறது என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவரது முகப்புத்தகத்திலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதி சஹ்ரான் இந்நாட்டு முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

ஆனால், சஹ்ரான் கும்பலின் இன, மத அடையாளத்தை பயன்படுத்தி, முஸ்லிம் எதிர்ப்பு பேரினவாதத்தை தூண்டிவிட்டுதான், நல்லாட்சியை தோற்கடித்து, இந்த கள்ளாட்சி, பதவிக்கு வந்தது. ஆகவே சஹ்ரான் குண்டு வெடிப்பு, இந்த கள்ளாட்சிக்கு, பாரிய உதவியாக அமைந்துள்ளது.

இன்று, குண்டு வெடிப்பை தடுக்க தவறியோர் பட்டியலை, ஆணைக்குழு அறிக்கை தந்துள்ளது. அதில் முதலிடம் மைத்திரிபால சிறிசேன என்ற முன்னாள் ஜனாதிபதி மட்டுமல்ல, இந்நாள் ஆளுங்கூட்டணி தவிசாளர் மற்றும் மொட்டுக் கட்சியின் பொலனறுவை மாவட்ட எம்.பியும், சபையில் ஆளும் தரப்பின் முதல் வரிசையில் அமர்ந்துள்ள முதல் எம்பி.

குண்டுவெடிப்புக்கு சில மாதங்கள் முன்னர் அவர் நல்லாட்சியை தடாலடியாக கலைத்து, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து, ஒரு "அரசாங்கத்தை" 2018ஆம் வருடம் நியமிக்க முயன்றார் என்பதையும் மறக்க முடியாது.

ஆகவே, "பேரினவாத பூமராங்" வளையம், அதை எறிந்த பேரினவாத மொட்டுக் காரர்களை நோக்கியே, இப்போ திரும்பி வருகிறது.

உயிர்த்த ஞாயிறு உதிர்த்த அப்பாவி உயிர்கள், எனது கொழும்பு கொச்சிக்கடையிலும், மட்டக்களப்பிலும் உயிரிழந்த தமிழ் கத்தோலிக்க உயிர்களின் ஆன்மாக்கள் சாந்தியடைய வேண்டி, "வினை விதைத்தோர், வினை அறுக்கும்" Count Down படலம் ஆரம்பமாகிறது..! - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளி., முல்லையில் தொழில் இழக்கும் 7000 பேர் மாற்று ஏற்பாடு மேற்கொள்ளப் படவேண்டும்

### சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம்

கிளிநொச்சி,பெப்.26

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்த வருடத்துடன் சுமார் 7000 மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்பினை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவர்களுக்கான மாற்று ஏற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

"2009 க்கு பின்னனர் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் பல நிறுவனங்கள் ஈடுபட்டன. குறிப்பாக ஹலோ ட்ரஸ்ட், சார்ப், டாஸ், போன்ற நிறுவனங்கள் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களில் அன்று தொடக்கம் இன்றுவரை சுமார் 7000 இற்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் பணியாற்றி வருகின்றார்கள். இது இந்த மாவட்டங்களின் சனத் தொகையில் மிகப் பெரியது. ஆனால் வருகின்ற 2022 உடன் கண்ணி வெடி அகற்றும் பணிகள் நிறைவுக்கு கொண்டு வரப்படவுள்ளதால் இதில் பணியாற்றிய 7000 இற்கு மேற்பட்டவர்கள் தங்களின் தொழில் வாய்ப்பினை இழக்கின்றனர். இதனால் அவர்களின் குடும்பங்களில் வாழ்வாதாரம் இழக்கப்படுகிறது. இந்த நிலைமை மிக மோசமான பொருளாதார மற்றும் சமூக பின்னடைவை ஏற்படுத்தும்.

மேற்படி தொழில்வாய்ப்பினை இழக்கும் 7000 இற்கு மேற்பட்டவர்கள் தொழிலின்றி சமூகத்தில் காணப்படுகின்ற நிலைமையானது ஆபத்தானது அதனால் பல்வேறு சமூக, பொருளாதார பாதிப்புக்கள் ஏற்படும் எனவே தாங்கள் தொழில் வாய்ப்பினை இழக்கும் இவர்களின் நிலைமையினை கருத்தில் கொண்டு இவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 45 கிலோ ஹெரோயினுடன் இரு இராணுவத்தினர் கைது!

கொழும்பு, பெப். 26

இராணுவத்துக்குச் சொந்தமான சொகுசு வாகனத்தில் போதைப்பொருள் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்டபோது இராணுவச்சீருடையில் காணப்பட்டனர்.

அருகொட சாலித என்ற பெரியளவிலான போதைப் பொருள் கடத்தல்காரரின் ரூபா 450 மில்லியனுக்கும் அதிகமான ஹெராயினுடன் அவர்கள், ஹொரண, திகேனபர பகுதியில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

தெற்கு மாகாணத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் பாதாள உலகத் தலைவரான மிதிகம சிந்தக அல்லது 'ஹரக் கட்டா' என்பவரிடமிருந்து போதைப்பொருட்களைப் பெற்ற பின்னர், ஹொரண, திகேனபர பகுதியில் உள்ள தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து திரும்பி வரும்போது இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்துக்குச் சொந்தமான சொகுசு வாகனத்தில் 45 கிலோவுக்கு அதிகமான போதைப்பொருட்களைக் கொண்டு செல்லும்போது சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டபோது இருவரும் இராணுவச் சீருடை அணிந்திருந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

கைதானவர்கள் அத்திடிய மற்றும் மருதானை இராணுவ முகாம்களைச் சேர்ந்தவர்கள் என்பதும், வாகனம் அத்திடிய இராணுவ முகாமில் உள்ள ஒரு படைப்பிரிவுக்குச் சொந்தமானது என்றும் முதற் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இராணுவத் தேவைக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனமே அது.

கைதானவர்களில் ஒருவர் இராணுவத்தை விட்டு தப்பியோடியவர் என்றும், மற்றைய அதிகாரிக்கு எதிராக கடுமையான நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## வடக்கு தீவுகள் யாருக்கு?

### இதுவரை முடிவில்லையென்கிறது அரசு

கொழும்பு, பெப். 26

வடக்கில் உள்ள மூன்று தீவுகளில் புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பான இறுதி முடிவை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது, இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் 3 தீவுகள் குத்தகைக்கு வழங்கப்படவில்லை. அவற்றை வங்கியதாகக் கூறப்படுவது பிழையான தகவலாகும். அங்கு மின்னுற்பத்தி நிலையத்தை அமைத்து அந்த பிரதேச மக்களுக்கான மின்சார தேவை பூர்த்தி செய்யவேண்டியது தேசிய தேவையாக இருக்கிறது.

இந்த நிலையிலேயே அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்தது. இந்த வேலைத்திட்டத்துக்கு 5 வருடங்களுக்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக சர்வதேச கேள்விக் கோரல் முன்வைக்கப்பட்டது.

அப்போது கேள்விக்கோரலுக்கு முன்னிலையான அனைவரும் தோல்வி அடைந்தனர். பின்னர் 2019ஆம் ஆண்டு 4 நிறுவனங்கள் உள்வாங்கப்பட்டன. அவற்றில் இந்தியா, சீனாவின் இரண்டு நிறுவனங்களும் அடங்குகின்றன. எனவே சர்வதேச கேள்வி கோரலில் சிக்கல் இல்லை.

ஆனாலும் இதுதொடர்பாக அமைச்சரவை இன்னும் தீர்மானிக்கவில்லை. திறைச்சேரி புதிய தொழில்நுட்பம் குறித்த அறிக்கையைக் கோரியுள்ளமையே அதற்கான காரணமாகும்.

அதேநேரம், இந்த வேலைத்திட்டம் குறித்த தொழில்நுட்ப அறிக்கை வழங்கப்படுமாக இருந்தால் அதற்கான நிதியை மானியமாக வழங்குவது குறித்து ஆலோசிப்பதாக, இந்திய தூதுவரும் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை யாரிடம் வழங்குவது என்பது பற்றி இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை - என்றார்.

## வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் மர்மமான முறையில் உயிரிழப்பு

### பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, பெப். 26

வவுனியா - கூமாங்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தரின் சடலமொன்று நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்றுக் காலை அவரது வீட்டு முற்றத்தில் சடலமாக கிடப்பதை அவதானித்த அவரது மனைவி, பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவத்தில் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா மர்லின்ரயன் என்ற 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார். (அ)



# முருங்கன் சமுர்த்தி வங்கி கணினி மயமாக்கப்பட்டது

மன்னார், பெப். 26

மன்னார் - நானாட்டான் பிரதேசத்திற்குற்கு உற்பட்ட முருங்கன் சமுர்த்தி வங்கி கணனி மயப்படுத்துவதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை முருங்கன் சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டு கணினிச் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், நானாட்டான் பிரதேச செயலர் , மன்னார் சமுர்த்தி அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கொரோனா தடுப்பூசி பெற்றவர்கள் அதிக தன்னம்பிக்கை கொள்ளாதீர்!

## இராணுவத் தளபதி எச்சரிக்கை



கொழும்பு, பெப். 26

**கொரோனா வைரஸ் தடுப்பூசியின் முதல் அளவைப் பெற்ற பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அதிக தன்னம்பிக்கை கொள்ளக்கூடாது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்ற மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்காமல் செயற்படுவதாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதல் டோஸ் எடுத்துக் கொள்வது கொரோனா வைரஸிலிருந்து யாருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்காது. இரண்டாவது டோஸ் பெற்றுக்கொண்டால் மாத்திரமே இது முழுமையடையும்.

எனினும் முதல் டோஸைப் பெற்ற மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து பின்பற்றவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும்.

இந்தியா நன்கொடையாக அளித்த தடுப்பூசிகளைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான மக்களுக்கு முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளின் புதிய பங்குகள் பெறப்பட்ட பிறகு இரண்டாவது டோஸ் வழங்கப்படும்.

இதேவேளை, நீண்ட வார இறுதி விடுமுறை வருவதால், மக்கள் கொழும்பிலிருந்து வெளியேறத் திட்டமிட்டுள்ளனர்.

எனினும் நீண்ட வார இறுதி விடுமுறையை முன்னிட்டு பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை- என்றார்.

(அ)

# இரண்டு சிறுமிகள் துஷ்பிரயோகம்!

## இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 26

பாடசாலை சென்று வரும் வழியில் தொலைபேசி இலக்கத்தை வழங்கி காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி நண்பரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று இரண்டு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இரண்டு இளைஞர்களை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

கோப்பாய் பகுதியில் வசித்துவரும் இரண்டு சிறுமிகளை வீதி வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் இருவர் ஒரே நேரத்தில் காதலித்து மறுநாள் நண்பரின் வீட்டுக்கு அழைத்து சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளனர். இந்த சம்பவம் 18ஆம் திகதி நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தமக்கு நடந்த விடயத்தை சிறுமிகள் உறவினர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தனர். இதன் அடிப்படையில் இளைஞர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இளைஞர்களை சட்டவைத்திய அதிகாரி முன் ஆஜர் படுத்தி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# புழக்கத்துக்கு வரவுள்ள புதிய 20 ரூபா நாணயம்

கொழும்பு, பெப். 25

இலங்கை மத்திய வங்கியின் 70ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட புதிய 20 ரூபா நினைவு நாணயம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மனினால் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இது இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட நினைவு நாணயம் ஆகும்.

50 லட்சம் நாணயங்கள் எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதி முதல் புழக்கத்தில் விடப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# ஆளுங்கட்சியில் இணையுமாறு ரஞ்சனுக்கு கடும் அழுத்தமாம்!

கொழும்பு, பெப். 26

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் தற்போது சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அரசாங்கத்துடன் இணைவாராயின், அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக ஆளுங்கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இரவு 10 மணியளவில் சிறைச்சாலை அதிகாரியொருவரின் கைபேசிக்கு அழைப்பொன்றை மேற்கொண்டு, ரஞ்சன் ராமநாயக்கவை தொடர்புகொண்டு உரையாடும்போதே இராஜாங்க அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சி தெரிவித்தார்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அரசாங்கத்துடன் இணைய முடியாதென தெரிவித்தார் என்றும், தற்போது அவர் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் மலசலகூடம் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சி குறிப்பிட்டார்.

# கொரோனா தடுப்பூசி ஏற்றினாலும் சுகாதார நடைமுறைகள் அவசியம்

கொழும்பு, பெப். 26

கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும், சுகாதார பழக்கவழக்கங்களை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என்று சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டு மையத்தின் ஊடகப்பிரிவு அதிகாரியான மருத்துவர் தேஷானி ஹேரத் தெரிவித்தார்.

கொவிட் - 19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களுக்கு, கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லையா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தடுப்பூசியை பெற்றதும் எல்லா பிரச்னைகளும் தீர்ந்துவிட்டன என நினைக்கக்கூடாது. தடுப்பூசி போட்டுக்கொள்ளும் அதேவேளை இதுவரை கடைப்பிடித்த சுகாதார பழக்கவழக்கங்களை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும். குறிப்பாக சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை சுத்தமாக கழுவுதல் போன்றவற்றை செய்யவேண்டும். கொவிட் - 19 தடுப்பூசியை ஏற்றினால் எதிர்காலத் தில் எவருக்கும் வைரஸ் தொற்று ஏற்படாது என்பது இன்னும் பரிசோதனை மூலம் உறுதிசெய்யப்படவில்லை. நடவடிக்கைகள் ஆய்வு மட்டத்திலேயே உள்ளன. - என்றார்.

# கோட்டாபயவுக்கு கட்சித் தலைமை கட்டாயமாக வழங்கப்படவேண்டும்

## விமல் வீரவன்ஸ விடாப்பிடி

கொழும்பு, பெப். 26

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கட்சித் தலைமை பதவி வழங்கப்படவேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ஸ மீண்டும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தற்போதைய அரசை ஆட்சிக்கு கொண்டு வர உதவிய பௌத்த பிக்குகளுக்கும் இடையே நேற்றுமுன் தினம் மாலை ஒரு சிறப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடல் ஸ்ரீஅபயராம விகாரையில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களுடன் பேசிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு அரசியல் பலத்தை வழங்குவதற்காக கட்சிக்குள் தலைமைப் பதவியை வழங்க வேண்டும்.

பொது ஆணையுடன் உருவாக்கப்பட்ட அரசாங்கம் பொருத்தமான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிக்குகள் உள்ளனர் - என்றார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் உதய



கம்மன்பில, அரசாங்கம் எதிர்கொள்ளும் அரசியல் சவால்கள் குறித்து வெளிப்படையான கலந்துரையாடலை நடத்தியதாகவும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் கூறினார்.

வெளி சக்திகளால் உருவாக்கப்பட்ட உள் சவால்களும் உள் மற்றும் வெளிப்புறச் சவால்கள் உள்ளன. அதன்படி எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பாகிஸ்தான் பிரதமரை தனியாக சந்தித்த முஸ்லிம் எம்.பி.க்கள்!

யூ.எல். மப்றூக்
பி.பி.சி. தமிழுக்காக

இலங்கைக்கு இரண்டு நாட்கள் அலுவல்பூர்வ பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை இலங்கையின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த புதன்கிழமை பிற்பகலில் சந்தித்துப் பேசினார்கள்.

அப்போது இலங்கையில் கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானிடம் முஸ்லிம் எம்.பிக்கள் முறையிட்டனர் என அறிய முடிகிறது.

கொழும்பில் உள்ள ஷங்ரில்லா விடுதியில் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதாக அதில் இடம்பெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் கூறினார். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 13 பேர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்கள் எரிக்கப்படுவது தொடர்பில் இம்ரான் கானிடம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டபோது, இதற்கான முடிவு கிட்டும் என தம்மிடம் இம்ரான் கான் கூறியதாக முஷாரப் தெரிவித்தார்.

”உடல்கள் பலாத்காரமாகத் தகனம் செய்யப்படும் விவகாரம் தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்களிடம் தான் பேசியதாக பாகிஸ்தான் பிரதமர் கூறினார். மேலும் கொரோனாவால் மரணிப்போரின் உடல்களை தகனம் செய்வதை முடிவுக்குக் கொண்டு வர தம்முடன் பேசியவர்கள் விருப்பம் கொண்டிருந்ததாகவும் விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் எனவும் இம்ரான் கான் நம்பிக்கையூட்டினார்” என்றும் முஷாரப் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் வரையில் நடைபெற்றுள்ளது.

### சந்திப்பு ரத்து என அறிவித்த அரசு

முன்னதாக, கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் பாகிஸ்தான் விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் - இலங்கையை வந்தடைந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை, இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையம் சென்று வரவேற்றார்.

பாகிஸ்தான் பிரதமரின் இந்தப் பயணத்தின்போது, அவரை இலங்கையின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பர் என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுவிட்டதாக, இலங்கையின் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கடந்த செவ்வாய்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கூறுகையில், பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில், பாகிஸ்தான் பிரதமருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றார். ஆயினும் இந்த சந்திப்பு ரத்து செய்யப்பட்டதன் பின்னணியில் தமது அரசாங்கம் இல்லை



என அவர் குறிப்பிட்டார்.

அரசின் இந்த பதில் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக எதிர்வினையாற்றினார், முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

”போலியான, கோழைத்தனமான காரணத்தை கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை பாகிஸ்தான் பிரதமர் சந்தித்தால் - அவரது உயிருக்கு ஆபத்து உள்ளதாக பாகிஸ்தான் அரசாங்க பிரமுகர்களுக்கு அரசாங்கம் கூறியுள்ளது. இது எந்த அடிப்படையும் இல்லாத பித்தலாட்ட கதையாகும்” என்று ரவூப் ஹக்கீம் கூறினார்.

### இம்ரான் கான் கவனத்தை ஈர்க்க ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு வருகை தரும் நேரத்தில், இலங்கையின் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கட்ந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கொரோனா காரணமாக மரணிப்போரின் சடலங்களை பலாத்காரமாக தகனம் செய்வதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டும், இவ்விவகாரம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமரின் கனவத்தை ஈர்க்கும் வகையிலும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியுதீன் உள்ளிட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த



பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

### சந்திப்புக்கு அனுமதி

இவ்வாறான நிலையிலேயே பாகிஸ்தான் பிரதமருக்கும் இலங்கையின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இந்த சந்திப்புக்கு முன்னதாக இது குறித்து தனது “பேஸ்புக்“ பக்கத்தில் பதிவொன்றை இட்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் “பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திடம் தான் கேட்டுக்கொண்டமைக்கு இணங்க, அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆயிஷா அபூபக்கர் இந்த சந்திப்பை உறுதிப்படுத்தியதாக“ குறிப்பிட்டிருந்தார்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மற்றும் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதோடு, அவர்களின் முன்னிலையில் 05 முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதாக, பிரதமர் மஹிந்தவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இரு தரப்பு ஒப்பந்தங்களாவன -

1. பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு ஆகியவற்றுக்கு இடையிலான சுற்றுலா ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
2. இலங்கை முதலீட்டு சபைக்கும் பாகிஸ்தான் முதலீட்டு சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்
3. இலங்கை தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.டி.ஐ), மற்றும் பாகிஸ்தான் கராச்சி பல்கலைக்கழகம் ஆகியற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்
4. கொழும்பு தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இஸ்லாமாபாத்தின் COMSATS பல்கலைக்கழகத்திற்கு இடையிலான ஒத்துழைப்பு.
5. கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பாகிஸ்தான் லாகூர் பொருளாதார கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

இந்த நிலையில், கடந்த புதன்கிழமை காலை பாகிஸ்தான் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளினதும் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்வது குறித்து, இரு நாட்டு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாக இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும், இரு தலைவர்களும் - இதன்போது கவனம் செலுத்தியதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் - இலங்கைக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டதாகக் கூறப்பட்டுள்ள போதிலும், அவர் சுமார் 24 மணித்தியாலங்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்தார். இதைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை மாலை 5 மணியளவில் அவர் தனது பயணத்தை நிறைவு செய்து கொண்டு, இலங்கையில் இருந்து பயணமானார்.



# பா.ஜ.கவின் அகண்ட பாரத கொள்கைக்குள் இலங்கையுமா?

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்

இலங்கை - இந்திய முறுகல் வலுவடைகின்றதைக் காணக்கூடிய ஒரு காலப்பகுதிக்குள் பிராந்திய அரசியல் விளங்குகிறது. ஆரம்பத்தில் கொழும்பு பின் கிழக்கு முனையம் பின்னர் யாழ்ப் பாணக் குடாநாட்டில் அமைந்துள்ள தீவுகள் என காணப்பட்ட முறுகல் நிலை யானது தற்போது இந்திய உள்நாட்டலு வல்கள் அமைச்சரும் பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய உறுப்பினருமான அமித்ஷாவின் அறிவிப்பு அதிகரித்துள் ளது. இதன் பிரதான நோக்கம் எதுவாக அமையும் என்பதிலேயே அதிக குழப்பம் நிலவுகிறது. இக்கட்டுரையும் அமித்ஷாவின் கருத்து வெளிப்படுத்தும் இந்திய நிலைப்பாடு எதுவாக அமையும் என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

முதலில் அமித்ஷா குறிப்பிட்டதாக திரிபுரா மாநில முதலமைச்சர் தெரிவித்த விடயத்தை நோக்குவோம். இலங்கையிலும் நேபாளத்திலும் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்கும் திட்டம் இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு உள்ளது என திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லாப் டெப் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளது. கடந்த 13.02.2021 அன்று இந்திய உள்துறை அமைச்சர் திரிபுரா விஜயம் செய்தபோது இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இலங்கையிலும் நேபாளத்திலும் பாரதிய ஜனதா கட்சி அரசமைக்கும் எண்ணமுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும் இலங்கையிலும் நேபாளத்திலும் தமது கட்சியை விஸ்தரிக்க வேண்டும். அங்கு ஆட்சி அமைக்க தேர்தலில் வெற்றி பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இதனைக் கண்டித்துள்ள திரிபுரா எதிர் கட்சி வெளிநாடு ஒன்றின் உள்விவகாரங்களில் தலையிடுதற்கு சமம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அமித்ஷா ஏன் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்ற கேள்வி அனைத்து தரப்பிடமும் எழுந்துள்ளது. காரணம் அமித்ஷா பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர். அடுத்த பிரதமர் என வர்ணிக்கப்படுபவர். இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு மூலகாரணமானவர்களில் அமித்ஷாவும் ஒருவராவார். அது மட்டுமன்றி காஷ்மீர் மாநிலத்தின் அந்தஸ்தை குறைப்பதிலும் அம்மாநிலம் யூனியன் பிரதேசமாக துண்டாடப்படுவதற்கும் பிராதான காரணமானவர் எனவும் அவர் மீது விமர்சனங்கள் உண்டு. எதுவாயினும் அவரது தீர்மானங்கள் இந்திய மத்தியரசின் தீர்மானங்களாகவே அமைவதுடன் அவரது அமைச்சும் பிரதானமானது என்ற வகையில் அவரது கருத்துப் பற்றி இலகுவானதாக அள விட்டுவிட்டு செல்ல முடியாது. அவரது அறிவிப்பானது ஏதோ ஒரு முக்கியத்துவமான செய்தியை வெளிப்படுத்துகிறது. அதிலும் நேபாளம் மற்றும் இலங்கை சார்ந்து மட்டுமே அத்தகைய தீர்மானம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களை விளங்கிக் கொள்வதன் மூலமே அமிர்த் ஷாவின் உண்மை நோக்கத்தை உணரமுடியும்.

ஒன்று நேபாளமும் இலங்கையும் சீனாவின் அதீதமான செல்வாக்கு பிராந்தியமாக மாறிவருகின்றன. இரண்டுமே இந்தியாவின் நெருக்கமான நட்பு நாடுகளாக இருந்ததுடன் இந்தியாவின் பாதுகாப்பு அரண்களாக பிரிட்டிஸ் இந்தியாவில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய போக்கும் ஓரளவு அண்மைக்காலம் வரை நிலவியது. ஆனால் கோவிட்-19 பின்பு சீனாவின் செல்வாக்கு நாடுகளாக விளங்குகின்றன. இலங்கையின் அண்மைக்காலப் போக்கு முழுமையாக சீனாவை மையப்படுத்தியதாக விளங்குகிறது. குறிப்பாக கொழும்பு கிழக்கு முனையத்தையும் யாழ்ப்பாண குடாநாட்டின் தீவுகளையும் சீனாவுக்கு வழங்க தீர்மானித்துள்ளமை இந்தியாவை முற்றாக விரட்டுவதாகவே தெரிகிறது. இலங்கையிலிருந்து இந்தியாவை அகற்றுவதற்காக சீனாவை முதன்மைப் படுத்து தெளிவாக தெரிகிறது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு சீனா தனது இருப்பினை இலங்கையில் நிரந்தர மானதாக மாற்றிவிடும் என இந்தியா அச்சமடைகிறது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும் எனவும் இந்திய ஆளும் தரப்பு கருதுகிறது.

இரண்டு சீனாவிடம் 150கோடி டொலர்கள் கடனை வாங்கிய இலங்கை இந்தியாவுக் கான சலுகைக் கடனான 40 கோடி டொலர்களை செலுத்தியுள்ளதன் மூலம் இந்தி யாவை முற்றாக விரட்டும் செயலை மேற்கொண்டுள்ளமை தெரிகிறது. இத்தகைய செய்முறை காங்கிரஸ் ஆதரவு பெற்ற கட்சிகளே வளர்ந்துள்ளன. எவையும் பாரதிய ஜனதா ஆதரவுக் கட்சிகளாக இல்லை என்பதுவும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கலாம்.

நான்கு நேபாளத்தைக் காட்டிலும் இலங்கையின் அணுகுமுறைகளே இந்தியாவுக்கு அதிக ஆபத்தானதாக உள்ளது. இலங்கையை கையாளுவதே இந்தியாவுக்கு அதிக உழைச்சலாக மாறியுள்ளது. அதனால் இலங்கையின் மீதான அணுகுமுறைகளில் கடந்த காலத்தில் மேற்கொண்டிருந்த அனைத்து நகர்வுகளையும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்குள் இந்திய மத்தியரசு தள்ளப்பட்டுள்ளது என்பதை அமித்ஷாவின் அறிப்பு உணர்த்துவதாக கொண்டுவர அனைத்து நகர்வுகளையும் மேற்கொண்டுவருவதாக தெரியவருகிறது. அதற்கான பேச்சுக்களை இந்தியாவுக்கான இலங்கை தூதரகத்துடன் ஆரம்பித்துள்ளதாகவும் அதன் பிரகாரம் இந்தியா ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அரசாங்கத்தின் மின் சக்தி அமைச்சர் கம்மன்பில தெரிவித்துள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டு நிலவும் சந்தர்ப்பத்தில் இந்தியா முற்றாக வெளியேற்றப்படுவது சாதரணமான விளைவுகளை ஏற்படுத்தாது என்பதை கடந்த கால அனுபவங்கள் உணர்த்தியுள்ளது.

எனவே இலங்கை - இந்திய அரசியல்



இந்தியா மீதான இலங்கை ஆட்சியின் நோக்கம் எது வென்பதை உணர்த்துகிறது. சீன பொரு ளாதாரத்திலும் அரசியலிலும் இலங்கை தங்கியிருக்கின்றது என்பதை வெளிப்படையாக இலங்கை தெரிவித்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

மூன்று நேபாளத்தில் வளர்ந்துள்ள மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் மீளவும் வலுப்படாது தடுப்பது இந்தியாவுக்கு அவசியமானது. அதாவது சீனாவின் ஆதரவுடன் அல்லது எண்ணத்தால் தூண்டப்பட்ட மாவோஸ்ட்டுகள் அமைப்பானது அண்மைக்காலத்தில் அதிக நெருக்கடியை சந்தித்து வருகின்றன. அது மட்டுமன்றி இந்திய ஆதரவு பெற்ற நேபாள காங்கிரஸ் வலுவான நிலையை நோக்கி நகர்கிறது. அதனை தக்க வைக்க வேண்டுமாயின் நேபாளம் மீதான இந்தியாவின் செல்வாக்கு அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறே இலங்கையிலும் இந்திய ஆதரவு பெற்ற அரசியல் கட்சியொன்றினை அமைக்கவும் அதன் தேர்தல் வெற்றியில் இலங்கையை பிற நாடுகளிடம் அதாவது சீனாவிடம் விளாது பாதுகாக்க முடியும் எனவும் அமித்ஷா கருதியிருக்க வாய்ப்புள்ளது. அத்துடன் இந்தியாவை சூழவுள்ள தென்னாசிய நாடுகள் அனைத்திலும் இந்திய தேசிய அமைந்திருக்க வாய்ப்புள்ளது.

ஐந்து இலங்கையின் போக்கில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியானது 1971 இல் 1984 இல் 1987 இல் ஏற்பட்டுள்ளதின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது.1984 இல் இந்திரா காந்தி ஆட்சியில் இருக்கும் போது இலங்கை தொடர்பாக ஏற்பட்ட நெருக்கடியை இராணுவரீதியில் கையாள திட்டமிட்டதாகவும் அது தொடர்பில் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான அமிர்தலிங்கத்திடம் பல தடவை இந்திரா காந்தி தெரிவித்ததாகவும் அதனை அமிர்தலிங்கம் ஏ.ஜே. வில்சனிடம் தெரிவித்ததாகவும் அவர் தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார். அக்காலப் பகுதியிலேயே இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது கவனத்திற்குரியதாகும். அன்றைய பூகோள அரசியலோ புவிசார் அரசியலோ தற்போது இல்லாத சூழல் ஒன்று நிலவுகின்ற அதே வேளை இலங்கை அரசு முற்றாகவே இலங்கையிலிருந்து இந்தியாவை வெளியேற்றும் உத்தியைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தற்போது திருகோணமலையில் இந்தியாவின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டிருந்த எண்ணெய்குதங்களையும் அதன் அபிவிருத்தியையும் இலங்கை தனது கட்டுப்பாட்டில் உறவு அதிக நெருக்கடியை நோக்கி நகர்கிறது. அதன் விளைவுகள் ஆபத்தான சூழலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகத்தை பல தரப்பிலிருந்தும் எழுப்பப்படுகிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்திய - சீன மோதலின் களமாக மாறிவருவது பிராந்திய அடிப்படையில் மட்டுமல்ல இலங்கை அரசியல் சூழலுக்கும் ஆரோக்கியமானது அல்ல என்ற பதிவு பலமானதாக மாறிவருகிறது. இந்தியாவின் நோக்கு நிலையில் இலங்கை தந்திரோபாய நிலம் என்பதை இலங்கையின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளரான செல்ரன் கொடிகாரா பல நூல்களில் பதிவு செய்துள்ளார். அவரது எண்ணத்தின் அடிப்படையில் இலங்கை இதுவரையான காலப்பகுதிகளில் இந்தியா சார்ந்து வெளியுறவுக் கொள்கையை இலங்கை பின்பற்றியது. சில காலப்பகுதிகளில் இந்தியாவை நிராகரித்த போதெல்லாம் அதிக நெருக்கடியை இலங்கை எதிர் கொண்டது. அத்தகைய சூழலுக்குள்ளேயே இலங்கை தற்போது நகர்வதாக சந்தேகம் நிலவுகிறது பாரதிய ஜனதாக் கட்சியினது அகண்ட பாரதம் என்ற குறிக்கோளின் வெளிப்பாடும் இலங்கையின் தற்போதைய நகர்வும் அமித்ஷாவின் அறிவிப்பினால் அதீத மான நிலையை அடைந்துள்ளது. •

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும்

## இரா. துரைரெத்தினம் வேண்டுகோள்



மட்டக்களப்பு, பெப்.26

தமிழ் மக்களின் உரிமைகள், அபிலாஷைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் பல விடயங்களை தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வருகின்றன. இத்தருணத்தில் நிரந்தர தீர்வுத் திட்டம் தொடர்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கைகளை முன் வைப்பது சிறந்ததாகும் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால அரசாங்கங்கள் மாறிமாறி பல தீர்வுத் திட்டத்தை முன்வைத்தாலும் புதிய அரசின் உத்தேச வரைபை தயாரிப்பதற்கான நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தீர்வுத்திட்டம் தொடர்பாக கட்சிகளிடம் ஆலோசனைகளை பெற்று வருகின்றது.

பெரும்பான்மையான கட்சிகள் இத்திட்டத்திலுள்ள நல்ல விடயங்களையும், குறைபாடுகளையும் முன்வைப்பது ஆரோக்கியமான விடயமே. பல கட்சிகள் முன்வைப்பதென்பது தற்காலிகமாக கையிலுள்ள விடயங்களை செயல்படுத்துவதற்கு சிறந்த வழியாகும்.

தமிழ்த் தலைமைகள் தேசிய ரீதியாக தமிழர்கள் தொடர்பான விடயங்களை எந்தளவுக்கு வலுவாக முன்வைக்கின்றனரோ அந்தளவுக்கு 13ஆவது திருத்தச்சட்ட விடயங்களையும் முன் வைப்பது ஆரோக்கியமானதே. இத்திட்டத்தை முன்வைக்கும் பட்சத்தில் இந்திய அரசின் வலுவான ஆதரவைப் பெற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# கண்டி எசல பெரஹறாவில் தாக்குதல் சஹ்ரானின் முதல் இலக்கு அதுவே

## ஆணைக்குழு அறிக்கையில் தகவல்



கொழும்பு, பெப்.26

**கண்டி எசல பெரஹறாவில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொள்வதே ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமின் முதல் திட்டமாக இருந்தது என ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

ஈஸ்டர் தாக்குதல் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், மிகப்பெருமளவில் வெடிபொருள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி புத்தளம் - வணாத்தவில்லு பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது என விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், 2019 ஏப்ரல் 4ஆம் திகதி சஹ்ரான் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளிட்ட தாக்குதல் பற்றிய தகவல்களை இந்திய அதிகாரிகள் புலனாய்வு சேவைகளுக்கு வழங்கியிருந்தாலும், பாதுகாப்புச் செயலாளர், தேசிய புலனாய்வுத் தலைவர், பொலிஸ்மா அதிபர், புலனாய்வுப் பணிப்பாளரும் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர் என ஆணைக்குழு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2019 ஏப்ரல் 20ஆம் திகதி சஹ்ரான் மற்றும் ஏழு தற்கொலை குண்டுதாரிகள் ஈஸ்டர் தாக்குதலை நியாயப்படுத்தும் உறுதிமொழியை எடுத்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மாவனெல்லையில் புத்தர் சிலைகளை சேதப்படுத்திய சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர்களான ஷாஹீத் மற்றும் சாதிக் ஆகியோர், க.பொ.த. சாதாரண தர தேர்வுக்கு தோற்றவிருந்த 30 மாணவர்களுக்கு பயிற்சி முகாம் ஒன்றை நடத்தியதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

# இரண்டு மாதங்களாகியும் கேள்விக்குப் பதிலில்லை

## சபையில் சாணக்கியன் ஆதங்கம்



கொழும்பு, பெப்.26

எனது கேள்விகளை சமர்ப்பித்து இரண்டு மாதங்களாகின்றன. இன்னும் பதில் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கேள்வி பதிலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன்: சபாநாயகர் அவர்களே! நான் பாராளுமன்றத்துக்கு வருகை தருவது மட்டக்களப்பிலிருந்து. இதற்கான தூரம் 350 கிலோ மீற்றர் ஆக உள்ளது. நான் எனது கேள்விகளை சமர்ப்பித்து இரண்டு மாதங்களாகின்றன. இன்னும் எனக்குப் பதில் கிடைக்கவில்லை.

நான் உங்களிடம் கேள்வி எழுப்பியது செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் அதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலைமை இருக்குமாயின் எங்களுக்கு உடன் தெரிவித்தால் நாங்கள் மட்டக்களப்பிலிருந்து பாராளுமன்றத்திற்கு வர வேண்டிய தேவை இருக்காது.

எங்களுக்கு பேசுவதற்கு பல பிரச்னைகள் காணப்படுகின்றன. இந்த விடயம் சுகாதாரத் துறை சம்மந்தமானது. முக்கியமாக கொவிட் 19 சம்பந்தமான விடயங்கள். செப்ரெம்பர் மாதம் சுகாதாரத்துறை அமைச்சரிடம் நான் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்க 3 வாரங்கள் கேட்டிருந்தார்.

இன்னும் அதற்கு பதிலளிக்கவில்லை. எங்களது கேள்விகளுக்கு பதிலளிக்காமையினாலேயே எமது உரிமைகள் உதாசீனம் செய்யப்படுவதினாலேயே நாங்கள் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போன்ற போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளது.

ஆனால், இந்தப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பொலிஸார் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றனர். இதற்கான பதிலினை அரசாங்க அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவர்களே அளிக்க வேண்டும்.

நாங்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க 2 வாரங்கள் கேட்டால் நாங்கள் பாராளுமன்றத்திற்கு வர வேண்டிய தேவை இல்லை. நீங்கள் ஏன் எங்களுக்குப் பதிலளிக்க மறுக்கின்றீர்கள்? நாங்கள் கேட்பது மட்டக்களப்பு மாவட்டத்தின் சுகாதாரம் பற்றிய முக்கியமான கேள்விகள்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவர்களே! நான் கிலோ மீற்றர் தூரத்தினைக் கூறியது இதற்காக அல்ல. நான் குறிப்பிட வந்த விடயம் என்னவென்றால் சுகாதாரத்துறை சம்பந்தமான கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை என்பதால் தான். முக்கியமான கேள்விகள் நெடுங்காலமாக இன்னும் பதிலளிக்கப்படாமலேயே உள்ளன.


அதற்காகவே நான் இந்தக் கேள்விகளை வினாவினேன். நான் பிரதமரிடமே அதிக கேள்விகளை வினாவினேன். ஏனெனில் அவரிடம் கேள்விகளை கேட்க முடியுமானதாக இருப்பது வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே. அதனால் தான் நான் அதிக கேள்விகளை அவரிடம் எழுப்பினேன்.

நீங்கள் பல கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், இன்னும் சுகாதாரம் சம்பந்தமாக எழுப்பிய கேள்விகளுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதனால் இதற்கு மூன்று பேரை இதற்கு நியமிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். அதன் போது கருத்து தெரிவித்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எனது கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் இருந்தால் ஊடகங்களில் என்னைப் பற்றி தவறான கருத்துக்களை முன்வைப்பார்கள். ஆகையால் இவரது கேள்விகளுக்கு நான் பதிலளிக்கின்றேன்- எனத் தெரிவித்தார். (எ)

# மரண அறிவித்தல்

மலர்வு
08 - 04 - 1948



உதிர்வு
23 - 02 - 2021

## ஐயம்பிள்ளை தாமோதரம்பிள்ளை

**(ஆட்டோ மாமா)**

வவுனியா, பாவற்குளத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.சரவணையை வசிப்பிடமாகவும், இல.17A, UC குவார்ட்டஸ், வவுனியா குருமண்காட்டை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தாமோதரம் பிள்ளை (ஆட்டோ மாமா) அவர்கள் 23.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - கண்மணிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணி அவர்களின் பாசமிகு கணவரும், சுகிதா (ஜேர்மனி), சுரேஸ் (அப்பன் - லண்டன்), காலஞ்சென்ற சதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவேந்திரன் (ஜேர்மனி), வித்தியாயினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குலசேகரம், மனோண்மணி மற்றும் தங்கலட்சுமி, காலஞ்சென்ற பொன்மணி மற்றும் புஸ்பவதி, காலஞ்சென்றவர்களான ஆனந்தசிவம், எமில் பற்றிக் மற்றும் தெய்வேந்திரகுமார், மோகனாதேவி, வசுமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், இராஜகோபால், சின்னராசா, அந்தோனிப்பிள்ளை, சிவபாக்கியம், கணபதிப்பிள்ளை மற்றும் இரத்தினசிங்கம், அமுதநாதன், கந்தசாமி, நவமலர், செல்வராணி, சிவமலர் ஆகியோரின் அன்புமைத்துனரும், கிஷாந்தினி, கஜன்,சோபிதன்,தர்னிஷா, தரன்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2021) வியாழக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப. 11.30 மணியளவில் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்குபூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.17A, UC குவார்ட்டஸ்,
குருமண்காடு, வவுனியா.
**தொடர்புகளுக்கு: 076 880 6687**

தகவல்:
**வசுமதி (சகோதரி).**

# அடிப்படைவாதம் தலைதூக்க இலங்கையில் இனி இடமில்லை

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலுள்ள அனைத்தும் செயல்படுத்தப்படும் - ரோஹித



கொழும்பு,பெப்.26

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் அனைத்தும் குறுகிய காலத்தில் முழுமையாக செயல்படுத்தப்படும். அடிப்படைவாதச் செயல்பாடுகள் எதிர்காலத்தில் தலைதூக்காத அளவுக்கு பலமான தீர்மானங்கள் எடுக்கப்படும் என துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் எதிர்க்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் மாறுபட்ட பல விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.. நிபுணர் குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

முறையான விசாரணை நடவடிக்கைகளுக்கு அமையவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் 10 பிரதான விடயங்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் பல விடயங்கள் தொடர்ந்து வெளிப்படுத்தப்படும். அறிக்கையின் உள்ளடக்கத்தை குறுகிய காலத்தில் முழுமையாக செயல்படுத்துவோம்.

அடிப்படைவாத செயல்பாடுகள் எதிர்காலத்தில் தலைதூக்காத அளவுக்கு பலமான தீர்மானங்கள் பல ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசியல் மற்றும் குறுகிய நோக்கங்களைத் தவிர்த்து அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய தரப்பிரும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டு ஆதரவு வழங்க வேண்டும்.

கடந்த அரசாங்கம் தேசிய பாதுகாப்பை அரசியல் தேவைக்காக பலவீனப்படுத்தியதால் தான் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை தடுக்கமுடியாதளவுக்கு புலனாய்வுப் பிரிவினரும், பாதுகாப்புப் பிரிவினரும் பலவீனமடைந்துள்ளனர் என்பது அறிக்கையின் பல காரணிகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே, தேசிய பாதுகாப்பை எக்காரணிகளுக்காகவும் சவாலுக்குட்படுத்த முடியாது. தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி அரசாங்கம் எந்நிலையிலும் செயல்படும்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் சாராம்சம் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படும். தேசிய பாதுகாப்பு காரணிகளை கருத்தில் கொண்டு ஒரு சில விடயங்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும்.. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றும். இதுதொடர்பில் எவரும் அச்சம் கொள்ள வேண்டாம்- என்றார். (எ)

# இலங்கையிடம் இனிமேல் ஆக்கபூர்வமான பொறுப்புக்கூறலை எதிர்பார்க்க முடியாது

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு



கொழும்பு,பெப்.26

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கையை பிரசார நடவடிக்கை எனக் குறிப்பிட்டு இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட போர்க் குற்றங்களுக்கும், பாரதூரமான மீறல்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்கவோ அல்லது பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதிலோ இலங்கைக்கு எவ்வித தேவையும் காணப்படவில்லை என்பது தெளிவாகியுள்ளது என மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் உரையை சுட்டிக்காட்டி மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜெனிவாவுக்கான பணிப்பாளர் ஜோன் பிஷர் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் தளத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள சர்வதேச குற்றங்களை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மறுத்துள்ளார்.

இதுவரை காலமும் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளிலிருந்து அவர் பின்வாங்கியுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கையையை வெறும் பிரசார நடவடிக்கை என அவர் குறிப்பிட்டுள்ளார்.இவ்வாறான தொரு நிலைப்பாட்டை கொண்டுள்ள இலங்கையிடம் இனிமேல் ஆக்கபூரவமான பொறுப்புக் கூறலை எதிர்பார்க்க இயலாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இதுவரை 17,914 பொலிஸ் அதிகாரிகளுக்கு தடுப்பூசி

கொழும்பு,பெப்.26

நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 2,583 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி இதுவரை 17,914 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரியே பொறுப்பு

## முஜிபுர் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.26

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவே அவர் மீது குற்றம்சுமத்தியுள்ளது. பாதுகாப்பு அமைச்சராக காணப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்று அன்று நாம் வலியுறுத்திய விடயங்களையே இன்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்திலிருந்த முஸ்லிம் அமைச்சர்கள் மீதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் தற்போதைய அரசாங்கத்திலுள்ளவர்களால் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவே அவர் மீது குற்றம்சுமத்தியுள்ளது. ஆனால், ஆணைக்குழுவால் குற்றம்சுமத்தப்பட்டுள்ள அவர் அரசாங்கத்தின் பங்காளியாகவுள்ளார். பாதுகாப்பு அமைச்சராக காணப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பு கூற வேண்டும் என்று அன்று நாம் வலியுறுத்திய விடயங்களையே இன்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

தாக்குதல்களை தடுத்து நிறுத்த தவறியவர்கள் குறித்து இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதே தவிர, அதன் பின்னணி குறித்து எதுவும் கூறப்படவில்லை. தாக்குதலின் சூத்திரதாரிகள் உள்நாட்டவர்களா அல்லது வெளிநாட்டு சக்திகளா என்பதும் குறிப்பிடப்படவில்லை. சூத்திரதாரிகள் இந்த ஆணைக்குழுவால் அடையாளப்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ள பிரதான சந்தேக நபரான சாரா நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே இதன் உண்மையான பின்னணியை கண்டறிய முடியும். எனவே, இந்திய அரசாங்கத்திடம் சாராவை திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். இதற்கான முயற்சிகளை முன்னெடுக்காவிட்டால் அதிலிருந்து அரசாங்கத்தால் தப்பிக்க முடியாது- என்றார். (எ)

# நிதிமோசடி வழக்கிலிருந்து மஹிந்தானந்த விடுவிப்பு



கொழும்பு,பெப்.26

தொழிற்சங்கத்துக்குச் சொந்தமான நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டில் பதிவு செய்யப்பட்ட வழக்கிலிருந்து அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கிலிருந்து கொழும்பு மேல் நீதிமன்றம் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை விடுத்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்குகின்ற ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த போது அந்த தொழிற்சங்கத்துக்கு சொந்தமான 39 இலட்சம் ரூபா நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என அவர் மீது குற்றம் சட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 32 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு,பெப்.26

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சுகாதாரப் பிரிவின் கீழ் நேற்று முன்தினம் மாத்திரம் 32 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நளின் அரியரத்ன தெரிவித்தார்.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள 03 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 20 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நோயாளர்களுள் அடங்குவர்.

அவர்களுள் 14 பேர் கட்டுநாயக்கா பிரண்டிக்ஸ் தொழிற்சாலையின் ஊழியர்கள் ஆவர்.

இதேவேளை ஏனைய 12 கொரோனா நோயாளர்கள் சீதுவ சுகாதாரப் பிரிவின் கீழ் பதிவாகியுள்ளனர். குறித்த பிரிவுகளில் இதுவரை 908 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கேகாலையில் உள்ள பின்னவல ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (எ)

# சிரிய அரசின் சித்திரவதைகளுக்கு பங்களித்தவருக்கு ஜேர்மனில் சிறை!

பெர்லின்,பெப். 26

சிரிய அரசின் சித்திரவதைகளுக்கு பங்களித்தவருக்கு ஜேர்மன் நீதிமன்றம் நான்கரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு துணையாக செயல்பட்ட குற்றவாளி என்று அடையாளம் காணப்பட்ட 44 வயதான ஐயாத் அல்-கரீப் என்பவருக்கே கடந்த புதன்கிழமை இந்தத் தண்டனை அறிவிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி அரபு வசந்தம் சிரியாவை அடைந்தது. இதைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட பெரும் இரத்தக்களரிக்கு, ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்குப் பிறகு, சிரிய அரச பயங்கரவாதம் தொடர்பான தீர்ப்பு உலகளவில் முக்கியம் பெற்றுள்ளது.

கரீப், உளவுத் துறையின் கீழ்நிலை உறுப்பினராக செயல்பட்டார். 2011 ஆம் ஆண்டு டுமா நகரில் நடந்த பேரணியின் பின்னர் குறைந்தது 30 எதிர்ப்பாளர்கள் கைது செய்யப்பட்டு டமாஸ்கஸில் உள்ள அல்-காதிப் தடுப்பு மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஜேர்மனின், கோப்லென்ஸில் உள்ள நீதிமன்றத்தால் 2020 ஏப்ரல் 23 ஆம் திகதி முதல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு பிரதிவாதிகளில் கரீப் முதலாவது நபர்.

இரண்டாவது பிரதிவாதி, 58 வயதான அன்வர் ரஸ்லான், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் நேரடியாக குற்றம் சாட்டப்பட்டார். 58 பேர் கொல்லப்பட்டதையும், 4,000 பேரை சித்திரவதை செய்ததையும் மேற்பார்வையிட்டார்.

ரஸ்லானின் விசாரணை குறைந்தபட்சம் ஒக்ரோபர் இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனிதகுலத்திற்கு எதிரான போர், இனப்படுகொலை உள்ளிட்ட குற்றங்களை விசாரிக்க அனுமதிக்கும்



சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இவர்கள் மீதான விசாரணையை ஜேர்மன் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளிலும் இந்த வகையான பிற வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்த சிரியர்கள் சர்வதேச நீதி அமைப்பில் முடக்கம் காரணமாக தங்களுக்கு தற்போது கிடைத்துள்ள ஒரே சட்ட வழிமுறையான- அந்தந்த நாடுகளின் சட்ட உதவியை பெற ஆரம்பித்துள்ளனர். துருக்கியிலும் பின்னர் கிரேக்கத்திலும் தங்கியிருந்த பிறகு, கரீப் 2018 ஏப்ரல் 25, அன்று ஜேர்மனிக்கு வந்தார்.

அவர் தனது கடந்த காலத்தை ஒருபோதும் மறுக்கவில்லை. அவரது புகலிடம் விண்ணப்பத்திற்கு பொறுப்பான ஜேர்மனிய அதிகாரிகளிடம் அவர் தனது கதையை கூறினார். இதனால் பெப்ரவரி 2019 இல் கைது செய்யப்பட்டார்.

“கிட்டத்தட்ட தொழில்துறை அளவில்” சித்திரவதை செய்யப்படும் ஓர் அமைப்பின் இயந்திரத்தில் அவர் ஓர் அங்கம்“ என சட்டத்தரணிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

10 மாத விசாரணைகளின் போது முக்கியமாக ரஸ்லான் மீது கவனம் செலுத்தியதால், கரீப் அமைதியாக இருந்து கமெராக்களிலிருந்து முகத்தை மறைத்துக் கொண்டார். அவர் எழுதிய கடிதமொன்றை சட்டத்தரணி படித்தார். அதில் அவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது துக்கத்தை வெளிப்படுத்தினார். கடிதம் படிக்கப்பட்ட போது, அவர் கண்ணீர் விட்டு அழுதார்.

அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்று அவரது சட்டத்தரணி கேட்டுக் கொண்டார். அவர் அரசின் உத்தரவுகளை நிறைவேற்றாவிட்டால் அவரும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று வாதிட்டார்.

ஜனாதிபதி அசாத்தின் உறவினரும் நெருங்கிய கூட்டாளியுமான ஹபீஸ் மக்லூரப்பின் மிருகத்தனத்திற்கு அவர் பயந்ததாக கூறினார்.

ஆனால் பிரதிவாதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி பட்ரிக் க்ரோக்கர், விசாரணைகள் முழுவதும் மௌனமாக இருப்பதை சுட்டிக்காட்டி, சிரிய அதிகாரிகள் பற்றிய தகவலை மறைப்பதாக குற்றம்சாட்டினார்.

விசாரணையின் போது, ஒரு டசின் சிரிய ஆண்களும் பெண்களும் அல்-காதிப் தடுப்பு மையத்தில் “கிளை 251” என்று பெயரிடப்பட்ட இடத்தின் பயங்கரமான துஷ்பிரயோகங்கள் பற்றி சாட்சியமளித்தனர்.

சிறைச்சாலையில் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், மின்சார அதிர்ச்சிகள், கைமுட்டிகளில் கம்பிகள் மற்றும் சவுக்குகளால் தாக்குவது மற்றும் தூக்கமின்மை போன்ற சித்ரவதைகளை வெளிப்படுத்தினர்.

சிலர் அடையாளங்களை மறைத்து சாட்சியமளித்தனர். இப்போதும், சிரியாவில் உள்ள தங்கள் உறவினர்கள் பழிவாங்கப்படுவார்கள் என்ற பயத்தில் முகங்களை மறைத்து அல்லது விக் அணிந்திருந்தார்கள். (ஐ)

# 23 கரட் தங்க பிரியாணி!



டுபாய், பெப். 26

உலகின் மிக விலையுயர்ந்த பிரியாணி டுபாயில் உள்ள ஹோட்டலில் விற்கப்படுகின்றது. ஒரு பிரியாணியின் விலை ஆயிரம் திர்ஹம் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 49 ஆயிரத்து 220 ரூபா.

இந்த விலைக்கு காரணம், 23 கரட் தங்கத்தாலான மிக மெல்லிய பட்டைகளால் மூடப்பட்டு இந்தப் பிரியாணி வழங்கப்படுவதுதான்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாய் நகரிலுள்ள பம்பாய் பாரோ உணவகத்தில்தான் இந்த விலை உயர்ந்த பிரியாணி விற்பனையாகிறது. “திறோயல் கோல்ட் பிரியாணி” என்று அழைக்கப்படும் இந்த பிரியாணியில் “23 கரட்” உட் கொள்ளக் கூடிய தங்கம் வைக்கப்பட்டுள்ளது. இதனால் தான் பிரியாணி அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

இங்கு பிரியாணியை பெறுவதற்காக 45 நிமிடங்கள் காத்திருக்க நேரும். இதனால் இணையம் மூலம் முன்னரே முற்பதிவு செய்ய முடியும். 3 கிலோ எடை வரை இந்தப் பிரியாணி இருக் கும். அத்துடன், இது வேக வைத்த முட்டை, மாதுளம் பழம், உருளைக்கிழங்கு, பொரித்த வெங்காயம், குங்குமப் பூ மற்றும் முந்திரிப் பருப்புகளால் அலங்காரம் செய்யபட்டுள்ளது.

அத்துடன் இங்கு அலங் காரத்துக்கு 23 கரட் தங்க இழைகளும் அதிகம் பயன் படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரியாணியை ருசி பார்ப்பதற் காக ஏராளமான நபர்கள் செல்கின்றனராம். இது தொடர் பான ஒளிப்படங்கள், காணொலிகள் வலைதளங் களில் பிரபலமாகி வருகின்றன. (ஐ)



அமெரிக்காவில் வரலாறு காணாத குளிர் நீடிக்கிறது. இதனால் உலகப் பிரபலம் பெற்ற நயகரா நீர் வீழ்ச்சியிலும் பனி படர்ந்து காணப்படுகின்றது.

# ஈகுவடோர் சிறைகளில் கலவரம்: 80 கைதிகள் பலி: 200 பேர் காயம்

கித்தோ, பெப். 26

ஈகுவடோர் நாட்டில் ஒரே நேரத்தில் 3 சிறைகளில் ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், காயமடைந்த 200இற்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்னமெரிக்க நாடான ஈகுவடோரின் முக்கியமான 3 சிறைகளில் உள்ள பல கைதிகள் கடந்த திங்கட்கிழமை திடீரென வன்முறையில் ஈடுபட்டனர். சக கைதிகள் மற்றும் சிறை அதிகாரிகள் மீது அவர்கள் கொடூர தாக்குதலை நடத்தினர். அத்துடன்சிறைக்கும்தீ வைத்தனர்.

கலவரத்தை ஒடுக்க சிறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி பலன் அளிக்கவில்லை. குவாயாகுவில் என்ற இடத்தில் உள்ள சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 20இற்கும் மேற்பட்ட கைதிகளை மற்றொரு பிரிவினர் தலையை துண்டித்து கொடூரமாக கொன்றனர்.

இந்த தகவல் பரவியதை அடுத்து டுவெண்கா நகர சிறைச்சாலையிலும் பயங்கர கலவரம் ஏற்பட்டது. இதில் 33 கைதிகள் கொல்லப்பட்டனர். 75 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இது தவிர ஈகுவடோரின் மத்திய பகுதியான லடாக்விபா என்ற சிறைச்சாலையில் கைதிகள் திடீர் வன்முறையில் ஈடுபட்டு ஒருவரை ஒருவர் பயங்கர ஆயுதங்களை கொண்டு தாக்கி கொண்டதில் 12 பேர் உயிரிழந்தனர்.

இந்த 3 சிறை கலவரங்களிலும் படுகாயம் அடைந்துள்ள 200 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 3 கலவரங்களிலும் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கலவரத்ரைத தடுக்க சிறைச்சாலைகளைச் சூழ இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# இந்தோனேஷியாவில் நிலச்சரிவு ஐவர் உயிரிழப்பு: 70 பேர் மாயம்!

ஜகார்த்தா, பெப். 26

இந்தோனேசியாவின் மத்திய சுலவேசி மாகாணத்தில் தங்க சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், 70 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அந்த நாட்டு மாகாண அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் பரிகி மவுண்டோங் மாவட்டத்தில் உள்ள புரங்கா கிராமத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

காணாமல் போனவர்களை தேடும் பணி நடந்து வருவதாக கூறப்படுகிறது.

(ஐ)





### சுருண்டன அணிகள்
# இங்கிலாந்து - 112 இந்தியா - 145

அஹமதாபாத், பெப். 26

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது போட்டி பகலிரவு ஆட்டமாக நடக்கிறது. நேற்று முன்தினம் அஹமதாபாத்தில் இந்தப் போட்டி ஆரம்பமானது.

சுழல் வீரர்களான அஸ்வின், அக்ஷர் பட்டேலுக்கு அபாரமான பந்து வீச்சுக்கு இங்கிலாந்து அணியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. 48.4 ஓவர்களில் அந்த அணி 112 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

தொடக்க வீரரான கிராவ்லி மட்டும் 53 ஓட்டங்களைப் பெற்றார். அணியின் நம்பிக்கை வீரர் ஜோ ரூட் 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

இந்திய அணியின் பந்துவீச்சில் அக்சர் பட்டேல் 6, அஸ்வின் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். 100ஆவது போட்டியில் களமிறங்கிய இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

முதல்நாளே தனது இனிங்ஸை தொடங்கியது இந்திய அணி. தொடக்க வீரராக களமிறங்கிய ரோஹித் சர்மா தனது ஆட்டத்தை சிறப்பாக வெளிப்படுத்தினார்.

ஆனாலும், மறுமுனையில் ஷப்மன் கில் 11, புஜாரா 0, கோலி 27 என்று விக்கெட்கள் சாய்க்கப்பட்டன. முதல்நாள் ஆட்டம் நிறைவடையும் போது இந்திய அணி 99 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்தது. களத்தில் ரோஹித் சர்மா 57 ஓட்டங்களுடனும், ரஹானே ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாம் நாளான நேற்று துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது இந்திய அணி. ரஹானே 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதைத் தொடர்ந்து ரோஹித் சர்மா 66 ஓட்டங்களுடன் லீச்சின் பந்தில் எல்.பி. டபிள்யூ. முறையில் வெளியேறினார். தொடர்ந்து மளமளவென்று விக்கெட்கள் சாய்க்கப்பட்டன. 53.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஜோ ரூட் 5, ஜாக் லீச் 4 விக்கெட்களையும், ஆர்ச்சர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து இங்கிலாந்து தனது 2ஆவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. முதல் இனிங்ஸை போலவே இந்த இனிங்ஸிலும் இங்கிலாந்து வீரர்களை பட்டேல் அச்சுறுத்தினார்.

தொடக்க வீரரான ஷாக் கிராவ்லி ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த பெயர்ஸ்ரோவும் ஓர் ஓட்டம் கூட எடுக்காமலே ஆட்டமிழந்தார்.

நேற்று மாலை 6 மணி வரையான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 60 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்திருந்தது.

ஒலியே போப் 8 ஓட்டங்களுடனும் பென் போக்ஸ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அக்ஷர் பட்டேல் 4 விக்கெட்களையும், அஸ்வின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

### ஆஸிக்கு எதிரான இருபது -20:
# இறுதிபந்து வரை விறுவிறுப்பு நியூஸிலாந்து அபார வெற்றி!

துனெடின், பெப். 26

இறுதிப் பந்துவரை விறுவிறுப்பாக நீடித்த ஆட்டத்தில் 4 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி தற்போது 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது.

முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி நேற்று துனெடினில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.



துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு மார்ட்டின் குப்தில், ரிம் செய்பேர்ட் இணை தொடக்கம் கொடுத்தது.

மூன்றாவது ஓவரில் செய்பேர்ட் வீழ்த்தப்பட்டார். 3 ஓட்டங்களுடன் அவர் வெளியேறினார். அடுத்து வந்த அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

குப்தில் - வில்லியம்ஸன் இணையின் அபார ஆட்டத்தால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. 50 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளை பறக்க விட்ட குப்தில் 97 ஓட்டங்களுடன் சாம்ஸின் பந்தில் ஸ்ரொய்னிஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

வில்லியம்ஸனுடன் கூட்டணி அமைத்தார் ஜேம்ஸ் நீஷம். இந்த இணையாலும் அதிகம் தாக்குபிடிக்க முடியவில்லை. 35 பந்துகளில் 53 ஓட்டங்களை எடுத்த வில்லியம்ஸன் ஆட்டமிழந்தார். அடுத்து 16 பந்துகளில் 6 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியை விளாசி 45 ஓட்டங்களை எடுத்த நீஷமும் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 219 ஓட்டங்களை குவித்தது நியூஸிலாந்து அணி.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் கேன் றிச்சர்ட்ஸன் 3 விக்கெட்களையும், டானியல் சாம்ஸ், ஜெய் றிச்சர்ட்ஸன், அடம் ஷம்பா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

220 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது அவுஸ்திரேலிய அணி.

மத்தியூ வேட், ஆரோன் பின்ஞ் இணை தொடக்கம் கொடுத்தனர். பின்ஞ் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வேட், 25, பிலிப்பே 45, மக்ஸ்வெல் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அவுஸ்திரேலியா தடுமாறியது.

அடுத்து வந்த மார்கஸ் ஸ்ரொய்னிஸ் நிலைக்க முயன்றார். ஆனால், அஹர், மார்ஸ் ஆகியோர் ஓட்டம் எதையும் எடுக்காமலே ஆட்டமிழந்தனர். இந்நிலையில் 7ஆவது விக்கெட்டுக்காக ஸ்ரொய்னிஸூடன் இணைந்தார் டானியல் சாம்ஸ். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இறுதி ஓவரில் வெற்றிக்கு 15 ஓட்டங்களே தேவை என்ற நிலை ஏற்பட்டது. அவுஸ்திரேலியா இலகுவாக இந்த இலக்கை எட்டிவிடும் என்ற நிலையில் அந்த ஓவரை வீசினார் நீஷம். முதல் பந்திலேயே டானியல் சாம்ஸ் ஆட்டமிழந்தார். அவர் 15 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

ஸ்ரொய்னிஸ் - சாம்ஸ் இணை 7ஆவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்களை சேர்த்தனர். இருபது - 20 போட்டியில் 7ஆவது விக்கெட்டுக்காக பெறப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டம் இதுவே. முன்னதாக இந்த சாதனையை இங்கிலாந்தின் கொலிங்வூட் - யார்டி இணை (91 ஓட்டங்கள்) வைத்திருந்தது.

தொடர்ந்து 5ஆவது பந்தில் ஸ்ரொய்னிஸ் சௌதியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அவர், 37 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 78 ஓட்டங்களை குவித்திருந்தார். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலியா அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 215 ஓட்டங்களை குவித்து 4 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நியூஸிலாந்தின் பந்து வீச்சில் சாண்டர் 4, நீஷம் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நியூஸிலாந்து அணியின் குப்தில் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 2-0 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. (ஐ)

# நடுவர்களின் முடிவில் அதிருப்தி! இங்கிலாந்து வீரர் முன்வைத்தார்



அஹமதாபாத், பெப். 26

இந்திய வீரர்கள் முறைப்பாடு செய்தால், நான்கு கோணங்களிலும் இருக்கும் காணொலியில் பார்க்கிறார்கள். ஆனால், நாங்கள் முறைப்பாடு செய்தால் நடுவர்கள் ஒரு கோணத்தில் மட்டும் பார்க்கிறார்கள். நடுவரின் செயல்பாடுகள் அதிருப்தி தருகின்றன என்று இங்கிலாந்து வீரர் கிராவ்லி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அஹமதாபாத்தில் நடக்கும் 3ஆவது டெஸ்ட் போட்டி தொடரிலேயே அவர் இந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்திய வீரர் ரோஹித் சர்மா லீச் பந்தில் ஸ்ரொம்ப் செய்யப்பட்டார். இது தொடர்பாக 3-வது நடுவருக்கு இங்கிலாந்து வீரர்கள் முறைப்பாடு செய்தனர். ஆனால், அது ஆட்டமிழப்பு இல்லை என்று மூன்றாவது நடுவர் அறிவித்தார். இதேபோன்று ஷப்மன் கில்லின் ஆட்டமிழப்பும் மறுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே கிராவ்லி மூன்றாவது நடுவர்கள் மீது குற்றச்சாட்டை வைத்துள்ளார்.

# எல்.பி.எல். ஆட்டநிர்ணய சதி முயற்சி: விசாரணைக்கு மறுக்கிறார் சஷித்ர




கொழும்பு, பெப். 26

எல்.பி.எல். தொடரில் வீரர்களை ஆட்டநிர்ணய சதிக்கு தூண்டினர் என்று கூறப்படும் விவகாரத்தில் இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள் பொலிஸாரின் விசாரணை வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

எல்.பி.எல். என்று அறியப்பட்ட இலங்கை பிறிமீயர் லீக் இருபது - 20 தொடர் அண்மையில் அம்பாந்தோட்டையில் நடந்தது.

இதில் நடந்த ஆட்டநிர்ணய சதி முயற்சி தொடர்பில் விசாரிக்கப்படுகின்றது. இதில் சகலதுறை வீரரான சஷித்ர சேனநாயக்க மீது முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால், அவரிடம் வாக்குமூலம் பெற பொலிஸார் முயன்றபோதிலும் அவர் அதைத் தவிர்த்திருந்தார். நேற்றைய தினம் மூன்றாவது தடவையாக அவரை விசாரணைக்கு வருகை தருமாறு அழைக்கப்பட்ட போதும் அவர் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை மீது விவாதம் நடத்த அரசாங்கம் தயார்

## சபையில் கூறினார் தினேஷ்



கொழும்பு,பெப்.26

**ஈஸ்டர் தாக்குதல் குறித்த இறுதி விசாரணை அறிக்கை மீதான விவாதத்தை நடத்த ஆளும் தரப்பு தயாராகவுள்ளது என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: ஈஸ்டர் தாக்குதல் குறித்த இறுதி விசாரணை அறிக்கை மீது விவாதம் நடத்துவதில் எவ்வித சிக்கலும் இல்லை. முன்னர் குறிப்பிட்டபடி விவாதம் நடத்தப்படும்- என்றார்.

இதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவால் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிமூல பிரதிகள் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டன. (எ)

# இந்தியாவிலிருந்து மேலும் 5 இலட்சம் தடுப்பூசிகள்

## நேற்று இலங்கை வந்தன



கொழும்பு,பெப்.26

இலங்கையால் கொள்வனவு செய்யப்பட்ட 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனேகா கொரோனா தடுப்பூசிகள் நேற்றுப் பிற்பகல் இந்தியாவிலிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன.

இதேவேளை கோவேக்ஸ் திட்டத்தின் கீழ் 264,000 தடுப்பூசிகள் அடுத்த வாரம் கிடைக்கவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி இந்தியாவிடமிருந்து இலவசமாக 5 இலட்சம் தடுப்பூசிகளை இலங்கை பெற்றுக்கொண்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த 29ஆம் திகதி முதல் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இதுவரையில், 3 இலட்சத்து 60 ஆயிரம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. (எ)

# எதிர்பார்ப்புக்கு முரணாகவே ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை

## அபேசிங்க அதிருப்தி



கொழும்பு,பெப்.26

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை முழுமையற்றதாகும். பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட தரப்பினரின் எதிர்பார்ப்பிற்கு முரணாகவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை முழுமையற்றதாகும். பேராயர் உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர் சபை, கத்தோலிக்க மக்கள் என அனைவரும் எதிர்பார்த்ததை போன்றல்லாமல் இந்த அறிக்கை முற்றிலும் வேறுபட்டதாகவுள்ளது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட சதித்திட்டமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாகும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும்.

நாட்டைப் பாதுகாக்கக் கூடிய வீரர் என்று கருதியே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். ஆனால், தற்போது அவரிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மரங்களை வெட்டி சட்ட விரோதமாக காடழிப்பவர்களைக் கூட கைது செய்ய முடியாத அரசாங்கத்துக்கு எவ்வாறு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்? எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டைப் பொறுப்பேற்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையைக் கொண்டு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியையோ அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களையோ கைது செய்ய முடியாது. இது தொடர்பில் பேராயரும் விரைவில் அவரது நிலைப்பாட்டை மக்களுக்கு அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம்- என்றார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் உண்மை காரணிகளை அறிக்கையில் எங்குமே காணமுடியவில்லை

## விஜித ஹேரத் விசனம்



கொழும்பு,பெப்.26

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மைக் காரணிகள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் எவ்விடத்திலும் உள்ளடக்கப்படவில்லை. இதனை ஆணைக் குழுவின் பிரதான குறைபாடாக கருத வேண்டும். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தேசிய பாதுகாப்பை வேண்டுமென்றே பலவீனப்படுத்தினார் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமை ஒன்றும் புதிய விடயமல்ல. இதனை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அறிக்கை குறித்து பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எவ்வாறான தீர்மானத்தை எடுப்பார் என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

எதிர்காலத்தில் அடிப்படைவாதம் தலைத்தூக்குவதை தடுக்கவும், பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புக்களை தடை செய்யவும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் துரிதமாக செயல்படுத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

துரதிஷ்டவசமாக நாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தற்கொலை குண்டுதாரிகளால் குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டியது யார்? குண்டுதாரிகளின் உண்மையான நோக்கம் என்ன? தாக்குதல்தாரிகளை இயக்கியது யார், இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதை எவ்வாறு தடுப்பது? என்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பலதரப்பட்ட வழிமுறைகளில் விசாரணைகளை முன்னெடுத்து இறுதிக்கட்ட அறிக்கையை கடந்த மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தார்கள். அறிக்கை கையளிக்கப்பட்டு 22 நாள்களுக்கு பின்னரே அறிக்கை சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட இது வரையில் வழங்கப்படவில்லை.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு புதிய விடயங்கள் எதனையும் குறிப்பிடவில்லை. கடந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சிலும், பாதுகாப்புத் துறையிலும் பொறுப்பில் இருந்தவர்கள் பொறுப்பினை முறையாகச் செயல்படுத்தமால் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள். என்றும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எதிர்காலத்தில் அடிப்படைவாதம் தலைத்தாக்குவதை தடை செய்யும் வகையில் ஒரு சில அமைப்புக்களை தடை செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சு தன் பொறுப்பில் வைத்து பொறுப்பற்ற வகையில் செயல்பட்டு தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளமை புதிய விடயமல்ல. நாட்டு மக்கள் இவரின் செயற்பாட்டை நன்கு அறிவார்கள். அரசாங்கத்தில் இருந்த தனிப்பட்ட முரண்பாட்டை தீர்த்துக் கொள்ள பாதுகாப்பு சபை கூட்டத்தை பயன்படுத்திக் கொண்டு தேசிய பாதுகாப்பினை பலவீனப்படுத்தினார்.

எதிர்காலத்தில் அடிப்படைவாதம் தோற்றம் பெறாமலிருக்க ஒருசில அமைப்புக்களை தடை செய்வதுடன் இவ் அமைப்புக்களின் தலைமைத்துவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளமையும் ஏற்றுக் கொள்ள கூடியது. ஒரு சில பௌத்த அமைப்புக்களின் கடும்போக்கான செயற்பாடு நாட்டின் மத அடிப்படையிலான முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு மூல காரணி என்பதை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆதாரங்களுடன் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளது.

இதனை நாட்டு மக்கள் எதிர்பார்க்கவில்லை ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலின் உண்மை காரணியையும், தற்கொலை குண்டுதாரிகளை இயக்கியது யாரென் றும் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. இதனை ஆணைக் குழுவின் பிரதான குறைப் பாடாக கருத வேண்டும். அடிப்படையாத அமைப்பின் தலைவர் முதல் தாக்குதலில் தன்னை மாய்த்துக் கொள்ள மாட்டார் என்றும் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. அவ்வாறாயின் தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் தலைவரல்ல தலைவர் யாரென்று கண்டுப்பிடிக்காமல் இருப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்றே குறிப்பிட வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையைக் கொண்டு மல்கம் ரஞ்சித் ஆண்டகை எத் தீர்மானத்தை எடுப்பார் என் பதை எதிர்பார்த்துள்ளோம். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் எழுந்த பிரதான கேள்விக்கு ஆணைக்குழுவின் அறிக்கை ஊடாக பதில் கிடைக்கவில்லை- என்றார். (எ)

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று முதல் கொரோனா தடுப்பூசி

கொழும்பு,பெப்.26

நாட்டின் பல பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன்படி தெஹிவளையில் உள்ள மக்களுக்கு தெஹிவளை மாநகர சபை வளாகத்தில் இன்று முதல் தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நிறைவுற்றதன் பின்னர், 30 - 60 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்.

இதன்படி, இன்று 26 ஆம் திகதி நெதிமாலையில் வசிக்கும் மக்களுக்கும் நாளை 27ஆம் திகதி சர்னங்கர வீதி, 28ஆம் திகதி கொஹூவலையில் வசிப்போருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை, மார்ச் 2ஆம் திகதி பார்க் வீதி, 3ஆம் திகதி தெஹிவளை கிழக்கு, 5ஆம் திகதி கொஹூவலை கிழக்கு பகுதியில் வசிப்போருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. (எ)

# கொலை குற்றவாளிகளான துமிந்த, பிரேமலால் சிறையில் சுகபோகம்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 26

கொலைக் குற்றவாளிகளான துமிந்த சில்வா, பிரேமலால் ஜயசேகர ஆகியோர் சிறைகளில் சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், 'ஒரே நாடு, ஒரே சட்டம் நாட்டில் செயல்படுத்தப்படும் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இன்று தனது சட்டத்தை இரண்டு வழிகளில் செயல்படுத்துவது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு மாற்றாகும். கடந்த மாதம் 19ஆம் திகதி எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டு அங்குலகொல பெலஸ்ஸ சிறைக்கு மாற்றப்பட்டார். அன்று அவரை பார்வையிட எனக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது.

ஆனால் இன்று, ரஞ்சன் ராமநாயக்க உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர் ஜூலம்பிட்டியே அமரயா எனும் வெளிநாட்டுப் பிரஜையை துஷ்பிரயோகம் செய்த அம்பந்தோட்டை முதல்வர் உள்ளிட்ட, பாதாள தலைவர்களுடனும் மேலும் 11 பேர் உள்ளடங்கிய சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டுள்ளார். இவ்வாறானவர்களுடன் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் ரஞ்சனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். அவ்வாறு உயிர் ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதற்கு லொஹான் ரத்வத்ததான் பொறுப்பேறக் வேண்டும்.

சமீபத்தில் நான் அவரைப் பார்வையிட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுடன் சிறைக்குச் சென்றேன். அவரை கழிப்பறைகளைக் கழுவுமாறு பணிப்பதாகக் கூறினார். ரஞ்சன் ராமநாயக்க கிட்டத்தட்ட 2 இலட்சம் மக்களின் விருப்பு வாக்குகளைப் பெற்ற நபர்.

கொலை குற்றவாளிகளான துமிந்த சில்வா மற்றும் பிரேமலால் ஜயசேகர ஆகியோர் சிறைகளில் சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்திலும் வெளியிலும் ரஞ்சனுக்காக குரல் எழுப்புகிறார். ரஞ்சன் ராமநாயக்கவின் உயிரைப் பாதுகாக்கவும், அவரை வெலிக்கடை சிறைக்கு மாற்றவும் நாங்கள் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

கல்வி tv
CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள் (நேரலை)

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தில் உலகம் எம்மைக் கவனிக்கிறது!



### நிரோஷன் பெரேரா எம்.பி.

கொழும்பு, பெப். 26

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேசம் உன்னிப்பாக எம்மை கவனித்துக் கொண்டிருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசரணை அறிக்கை கார்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஏனைய கத்தோலிக்க மதத் தலைவர்களின் தொடச்சியான கோரிக்கைகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளனர். இந்த அறிக்கையை மீள் பரிசீலனை செய்ய எந்த சட்டத்துறை அனுபவமுமற்ற ஆறு பேர் கொண்ட குழு ஒன்றை பக்கச்சார்பாக நியமித்துள்ளனர். உண்மையில் இந்த அறிக்கையை நாட்டு மக்களிடமிருந்து மறைக்கவே முயன்றனர்.

அரசாங்கம் எடுக்கும் சில நடவடிக்கைகளுக்கு எதிராக நேர்மையின் பக்கம் குரல் கொடுக்கும் போது கர்தினாலுக்கு எதிராக சில குழுக்கள் அவரை இழிவுபடுத்தும் செயல்பாடுகள் ஆரம்பித்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இன்னும் முறையான விசாரணைகள் இல்லை. ஏன் இவ்வளவு பின்னடைவு? இலங்கையர்கள் மாத்திரம் அல்ல வெளிநாட்டுப் பிரஜைகளும் இதில் உயிரிழந்துள்ளனர். சர்வதேச நாடுகள் இவ்வாறான தாக்குதல் தொடர்பாக துரிதமாக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனையையும் வழங்கி இருக்கும். இன்றும் கூட இத்தாக்குதல் தொடர்பாக சர்வதேசம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டேதான் இருக்கிறது.

இந்த தாக்குதல் மூலம் கூடுதல் பயனடைந்தவர்கள் யார்? சாரா யார்? அபு என்பவர் யார்? குறித்த நபர்களுக்கும் இந்தியாவிற்குள்ள தொடர்பு என்ன? முன்கூட்டி இந்தியாவிற்கு எவ்வாறு தெரியவந்தது? புலனாய்வு அதிகாரிகள் யார்? அவர்களுக்கு எவ்வாறு இந்த தகவல் முன்கூட்டியே தெரியவந்தது? பணம் வழங்கியது யார்? பின்னணியில் செயற்பட்டவர் யார்? இயக்கியது யார்? போன்ற விடயங்கள் எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அரசியல் கரணங்களுக்காக இதை பயன்படுத்த வேண்டாம். இந்த தாக்குதலை வைத்து அதிகாரத்தைப் பலப்படுத்த வேண்டாம். இதை வைத்துக் கொண்டு நாட்டில் இனவாதத்தை போஷிக்க வேண்டாம் - என்றார். (ஐ)

# சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறும் தேவை இல்லை

### அஜித் நிவாட் சொல்கிறார்

கொழும்பு, பெப். 26

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொருளாதாரத்தை புதிய பாதையை நோக்கிக் கொண்டு செல்ல முடியும். கடன்களின் மூலமாக மாத்திரம் இதற்கான தீர்வுகளைத் தேடாது, கடனற்ற நிதி சேமிப்பின் மூலம் நாட்டைப் புதிய பாதையை நோக்கி கொண்டு செல்ல முடியும்.

இதற்கான தீர்மானங்களை மேற்கொண்டு, அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றனர். இந்த நடவடிக்கைகளின் பிரதிபலன்களை எதிர்வரும் காலத்தில் நாட்டில் உள்ள அனைவரும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எப்பொழுதும் கடன் பெற்று செயல்படுவதனால், செயல்பாடுகள் வெற்றியளிப்பதில்லை. ஒவ்வொரு வழியிலும் இதற்கான நிதியை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படாது.

எனினும், தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்களில் அதன் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

## தபால் கட்டணத்தில் திருத்தம்!

கொழும்பு,பெப்.26

தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வது குறித்த யோசனையை அடுத்த மாதம் முன்வைக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தபால் திணைக்களத்தின் நட்டத்தை குறைக்கும் வகையிலும் புதிய முறைமையை வகுக்கும் வகையிலும் இந்தத் தீர்மானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சாதாரண தபால் முத்திரை கட்டணம் 15 ரூபாயாக காணப்படுகின்றது. எனினும், அதற்காக திணைக்களம் 22 ரூபாய் 75 சதத்தை செலவு செய்வதாகவும், துரித தபால் சேவைக்காக 50 ரூபாய் அறவிடும் நிலையில் தனியார் பிரிவுகள் அதற்காக 250 ரூபாயை அறவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை: பாதிக்கப்பட்டோருக்கு திருப்தியில்லை!

### உலப்பனே சுமங்கல தேரர் கடும் அதிருப்தி

கொழும்பு, பெப். 26

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான அறிக்கை பாதிக்கப்பட்டவர்களை திருப்திப்படுத்தும் வகையில் இல்லை. எதிரானவர்களை வேட்டையாடும் நோக்கிலும் தயாரிக்கப்பட்ட ஆவணமாகவே இதனை நாம் காண்கின்றோம் என உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது நாட்டில் இடம் பெற்ற பெரும் அனர்த்தமாகும். இதனை நாம் அடிப்படைவாத மதக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலாகவே பார்த்தோம். ஆனால், அண்மையில் வெளியிடப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் இந்த தாக்குதலின் பின்னணியில் அரசியல் செல்வாக்கு காணப்படுகின்றமை வெளியாகியுள்ளது.

அது மாத்திரமல்ல இந்த ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையின் பின்னணியிலும் அரசியல் ரீதியான சக்தியொன்றின் அழுத்தம் காணப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த அறிக்கை உயிர்த்த ஞாயிறு தாக்குலால் பாதிக்கப்பட்டவர்களை திருப்திப்படுத்தும் வகையில் இல்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ஏனெனில், இந்த அறிக்கையை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை இலக்காக கொண்டும் எதிரானவர்களை வேட்டையாடும் நோக்கிலும் தயாரிக்கப்பட்ட ஆவணமாகவே இதனை நாம் காண்கின்றோம். இந்த ஆணைக்குழுவில் முன்னாள் நீதியரசர்கள், அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட நிபுணர்கள் இருந்த போதிலும் அவர்கள் எவ்வாறு ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர் என்பது கேள்விக்குறியாகவுள்ளது' எனவும் அவர் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# பச்லெட் அம்மையாரின் அறிக்கை இலங்கை முற்றாக நிராகரிக்கிறது!

## அறிக்கை வெளியிட உரிமை இல்லை என்றும் தினேஷ் குணவர்த்தன சாடல்





கொழும்பு, பெப். 26

**இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் விடுத்த அறிக்கையை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கிறது. இப்படி ஓர் அறிக்கையை வெளியிட அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. இதனூடாக மனித உரிமைகள் சாசனம் மீறப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நேற்று முன்தின அமர்வில் இலங்கை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் வெளியிட்டார். இதற்கு பதிலளித்து இணையவழியில் உரையாற்றியபோதே வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அந்த உரையில் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கையானது, கடந்த ஆண்டு இந்த சபையின் 43ஆவது அமர்வில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக அறிவித்த தீர்மானம் 30ஃ1 மற்றும் 40/1 ஆகியவற்றிலிருந்து வெளிவருகின்றது. உயர் ஸ்தானிகரின் அறிக்கையை இலங்கை நிராகரிக்கின்றது. இது ஐ.நா. சாசனத்தின் 2 (7) வது பிரிவை முழுமையாக மீறும் செயலாகும்.

இலங்கைக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ந்த முன்கூட்டிய, அரசியல் மயப்படுத்தப்பட்ட மற்றும் பாரபட்சமற்ற சில கூறுகளின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றது. இந்தப் பரிந்துரைகள் தவறான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

உயர் ஸ்தானிகரின் அறிக்கையில் உள்ள முடிவுகளையும் பரிந்துரைகளையும் இலங்கை திட்டவட்டமாக நிராகரிக்கின்றது.

ஐ.நா. மற்றும் அதன் பொறிமுறைகளுடன் தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபட்டு வரும் இலங்கை போன்ற ஒரு நாடு தொடர்பாக, சொத்து முடக்கம், பயணத் தடைகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைப் பற்றிய குறிப்புக்கள் சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாகக் கவனிக்க வேண்டிய ஒரு தனித்துவமான மற்றும் சிறந்த ஆபத்தை சுட்டிக்காட்டுகின்றது.

அறிக்கையில் கூறப்பட்ட தவறான தகவல்கள், தவறான கருத்துக்கள் மற்றும் தன்னிச்சையான மதிப்பீடுகள் குறித்து இலங்கை எழுத்துபூர்வ கருத்துக்களை வழங்கியுள்ளது. உயர் ஸ்தானிகர் அலுவலகம் தனது அறிக்கையை முன்னெப்போதும் இல்லாத பிரச்சாரத்துடன் இணைந்து வெளியிட்டமை மற்றும் குறித்த அறிக்கை தொடர்பான எமது கருத்துக்களை ஒரு துணை நிரலாக வெளியிட மறுத்தமை ஆகியன வருத்தமளிக்கின்றது.

இதுபோன்ற செயன்முறைகள் ஐ.நாவின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பாதிக்கும் ஆபத்தான முன்னுதாரணத்தையும் அமைக்கும்.

அரசியல் உந்துதல்களால் உந்தப்பட்டு, இந்த சபையால் இலங்கை மீது செலுத்தப்பட்டுள்ள கவனத்திற்காக நாங்கள் வருந்துகின்றோம். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு தீர்மானமும் சபையால் நிராகரிக்கப்பட்டு மூடப்பட வேண்டும். அரசமைப்புக்கு இணங்க, உள்நாட்டு முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப ஆக்கபூர்வமாக இந்த சபையுடன் ஈடுபட நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

---

# 14,565 பேர் யாழ்ப்பாணத்தில் வேலை தேடுவோராக உள்ளனர்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

'யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 ஆயிரத்து 565 பேர் தொழில் வாய்ப்புக்களை தேடுகின்றனர் என்று புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன", என்று யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய மட்டத்தில் நடைபெறுகின்ற மூன்றாம்நிலை, தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான செயல்திட்டம் நேற்று மேலதிக அரச அதிபர் தலைமையில் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலையற்றோர் வீதத்தைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு இந்த செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதேநேரம், கொரோனா தொற்றுப் பரவலால் யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

மேலும், எமது இளைஞர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட செயல்திட்டங்களை பிரதேச செயலகங்கள், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை, மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு, தேசிய தொழில் பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகியன தங்களுடைய பணிகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுத்து வருகின்றன. அத்துடன், தொழில் நுட்பம் சார்ந்த பலதரப்பட்ட விடயங்களை தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி மற்றும் துறைசார் நிறுவனங்கள் மாணவர்களுக்கு வழிகாட்டி வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 ஆயிரத்து 565 பேர் தொழில் வாய்ப்புக்களை தேடுவதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. எனினும், இந்த எண்ணிக்கை சற்று அதிகமாகக் காணப்படலாம். வேலை தேடுவோர் க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரதிற்கும் குறைந்த என்னும் பெறுபேறுகளின் அடிப்படையில் காணப்படுகின்றார்கள் - என்றார். (ஐ-3)

---

# கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். பிரதேச செயலக எல்லைக்குள் வசிக்கும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான நிதியுதவி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயல் திட்டத்தின் ஊடாகவே இந்த நிதியுதவியை கலாசாரப் பேரவை வழங்கவுள்ளது.

இதற்கு, தர மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர். தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (ஐ)

---

# சாராவை அழைத்துவராமை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

## நிரோஷா அத்துகோரள

கொழும்பு, பெப். 26

சாராவை நாட்டுக்கு அழைத்துவர கோட்டா - மஹிந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களின் மீது இது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று நீதிக்கான பெண்கள் இயக்கத்தின் உறுப்பினரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நிரோஷா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத தாக்குதலை தடுக்க முடியாமலிருந்தவர்கள் யார் என்பதை முழு நாடுமே அறியும். ஆனால் இந்த தாக்குதலுக்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பதே இன்னும் மர்மமாக இருக்கின்றது.

இந்த சம்பவத்திற்குப் பின் அரசியல் இலாபத்தைப் பெற்றவர்கள் குறித்தும் உண்மை அம்பலப்படுத்தப்பட வேண்டும். சஹ்ரான் உள்ளிட்டவர்களின் விடயங்கள் இதுவரை அறிக்கையில் அம்பலப்படுத்தப்படவில்லை. அப்போதிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில் சஹ்ரான் என்பவர் புலனாய்வுப் பிரிவுக்கு பல தகவல்களை அளித்து வந்தவர். அதன் பின்னர் அவருக்கு என்ன நடந்தது? சஹ்ரானுக்கு அப்போது சம்பளம் அளிக்கப்பட்டதை தற்போதைய அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருந்தது.

அந்த வகையில், ஆணைக்குழு அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் மற்றும் அதிகாரிகளை விசாரணைக்கு அழைக்கவில்லை. இதே போல ஈஸ்டர் தாக்குதல் குழுவில் இருந்து தப்பித்த சாரா ஜாஸ்மின் இன்னும் உயிருடன் இருக்கின்றார். அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்ற விதம் என்ன? இதுகுறித்து இந்தியாவிடமிருந்து சாராவை இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளதா? இதுவரை இல்லை. இந்தியாவிலிருந்து இரண்டு உயர் அதிகாரிகள் இலங்கைக்கு வந்துசென்றனர். ஆனால், அவர்களிடம் இது தொடர்பான தகவல் கோரப்படவில்லை. சாரா ஜாஸ்மினிடம்3 பல தகவல்கள் இருப்பதாக அவரது தாயாரே கூறியுள்ளார்- என்றார்.

---

# மணல் திருட்டு

வடமராட்சி, பெப். 26

கோயில் திருப்பணிக்காக கொண்டு வரப்பட்ட ஒரு டிப்பர் மணல் இரவோடிரவாக திருட்டுப் போயுள்ளது.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை - புலோலி - குரும்பைகட்டி ஞானவரைவர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அந்த ஆலயத்தின் கட்டுமானப் பணிக்காகப் பொருட்கள் இறக்கப்பட்டன. ஆலய சூழலில் ஒரு டிப்பர் மணலும் பறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கட்டுமானப் பணிகள் தொடங்கும் முன்னரே ஒரு டிப்பர் மணலையும் இனந்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் இரவோடிரவாக களவாடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலயச் சுற்றாடலில் அயலவர்கள் எவரும் இல்லாத நிலையில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டது. மேலும் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்க ஆலய நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-2)



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒருதிருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவிலலீசன்
6.35 மணி : மதம் சார்பானநற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையபலன்
வழங்குபவர் : சைவசித்தாந்தபண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதிகோகிலாமகேந்திரன்
7.15 மணி : கதைவழிஅறமொழி
வழங்குபவர் : திரு. F.X.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,நல்லூர்
7.20 மணி :சித்தமருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றையபத்திரிகைகள்
8.30 மணி : காலைசெய்திகள்
9.00 மணி : கலாட்டாகாலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00 மணி : துறைக்குஅப்பால்(மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்துகாட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கானநேரலைநிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி :ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி: ரசிகன் என்கின்றதலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- நில ஆக்கிரமிப்பு



10.00 மணி :யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள் (நேரலை)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி விநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மல்லாகம் முதலி அம்பாள் தேவஸ்தானம் கோவில் திருவிழா
01.00 மணி : ஐந்தாவது முருகபக்தி மாநாடு 2021 (இணையவழி) நேரலை
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி விநாயகர் கோவில் திருவிழா

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.